வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 கார்த்திகை திங்கள் 8-ம் நாள் (24—11—1963) ஞாயிற்றுக்கிழமை | றஜப் 7 | இதழ் 26

# மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்

## சிங்கள அமுலைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கை


### ஐ. நா. வுக்கும் மகஜர் அனுப்ப முடிவு

சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அகில இலங்கையிலும் அமுலுக்கு வரவிருக்கும் 1963 ஜனவரி முதலாம் தேதயன்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய தமிழ் பிரதேசங்களிலுள்ள கச்சேரிகளில் ஆர்ப்பாட்டம் நடத்த தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. இலங்கையில் நடைபெறும் இன ஒதுக்கல் நடவடிக்கைகளையிட்டு மகஜர் தயாரித்து ஐ. நா. வுக்கு அனுப்புவதென்றும் கட்சி முடிவு செய்துள்ளது.

கடந்த வார இறுதியில் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

1964 ஜனவரி முதலாம் தேதியன்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய நகரங்களிலுள்ள கச்சேரிகளில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்கள் எத்தன்மையுடையதாக அமையும் என்பதை டிசம்பர் மாத மத்தியில் செங்கலடியில் நடைபெறும் மத்

(9-ம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தமிழரசு ஆதரவு பெற்ற வேட்பாளர்களாக விளங்குபவர்கள் இப்படத்தில் காணப்படுகின்றனர். இருப்பவர்கள்:-இடமிருந்து வலம்:-திரு. பீட்டர் சோமசுந்தரம் (15ம் வட்டாரம்)திரு சு. செ. மகாதேவா (6ம் வட்டாரம்)திரு. ஆர். சி. மன்மதராயன் (9 ம் வட்டாரம்) திரு. நா. த. செல்லத்துரை (14 ம் வட்டாரம்) டாக்டர். ச. அ, தருமலிங்கம் (4 ம் வட்டாரம்) நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்):-திரு. சோ சிவரெத்தினம் (13ம் வட்டாரம்) திரு. த. சிவப்பிரகாசம் (4 ம் வட்டாரம்) திரு. ப கதிரவேலு (1 ம் வட்டாரம்) திரு. ஜே. அழகையா (16ம் வட்டாரம்)

# திருமலைத் தேர்தல்

## தமிழரசு வெற்றி ஊர்ஜிதம்

### தலைவர்கள் தீவிரப்பிரசாரம்

திருகோணமலை, நவ. 21

திருமலை இடைத் தேர்தலில் திரு. எஸ். எம். மாணிக்கராசா அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெறுவார் என்பது உறுதியாகிவிட்டது. தமிழரசுத் தலைவர்கள் அனைவரும் திருமலையில் முகாமிட்டுத் தமிழரசு வேட்பாளரின் வெற்றிக்காக அரும்பாடுபட்டு வருகின்றனர்.



திரு. எஸ். எம். மாணிக்கராசா

திருமலைத்தீரர் திரு. இராசவரோதயத்தின் மறைவினால் காலியாகிய பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குரிய தேர்தலில் போட்டியிட தமிழரசுக்கட்சி வேட்பாளராகத் திரு. எஸ். எம். மாணிக்கராசாவை நிறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் முதல் தமிழரசுத் தலைவர்கள் அனைவரும் திருகோணமலையில் முகாமிட்டுத் திரு மாணிக்கராசாவின் வெற்றிக்காக அரும்பாடு பட்டு வருகின்றனர். பட்டி தொட்டிகளெல்லாம் மாபெரும் பொதுக் கூட்டங்கள் வைத்து பொது மக்களுக்குத் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை விளக்கி வருகின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்புகையிரத நிலையம் திறக்கப்பட்டது

பல லட்சரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புகையிரத நிலையம் சைவ சமயாசாரப்படி குறிப்பிட்ட தேதி (20-11-63 புதன்கிழமை) காலை சுப முகூர்த்தத்தில் திறந்து வைக்கப்பட்டு விட்டதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அறிவித்திருந்தபடி ஆடம்பர மெதுவுமில்லாமல், பொறியியற் கலைஞர்களும் புகையிரத ஊழியர்களும் தொழிலாளர்களும் சேர்ந்து திறந்து வைக்கப்படுவதாக விருந்து, யாழ் நகர பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பாவின் தலைமையிலால் திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால் சமயாசாரமுறைப்படி சாந்தி பூசை செய்து குறிப்பிட்ட நேரத்தில் நிலையம் திறக்கப்பட்டுவிட்டதாகவும் அறிகிறோம்.

தமிழ் பேசும் மக்களின் வெந்துபோன-புண்பட்ட இதயங்களில் மேலும் வேல் பாய்ச்சலாம் என்ற எண்ணமோ என்னவோ, புதிய கட்டிடத்தில் திறப்பு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடி, அதே சாக்கில் சில மந்திரிகளையா

(9-ம் பக்கம் பார்க்க)

## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலன்டர் No. 1 (சிகப்பு) | 1-85 |
| நன்மொழிக் கலன்டர் No. 2 | 1-05 |
| மாதக் கலன்டர் (பஞ்சாங்கக் கலன்டர்) | -65 |
| சிங்கள கலன்டர் (No. 1 கலன்டர் அளவுள்ளது) | 1-75 |
| ரேபிள் கலன்டர் (பிளாஸ்ரிக் ஸ்ரான்டுடன்) | 4-75 |
| தகரம் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-10 |
| No. 1. பிளாஸ்ரிக் தமிழ் டயறி(பிளாஸ்ரிக் கவருடன்) | 2-25 |
| No. 2. பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 1-75 |
| No. 3. பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 2-95 |
| No. 4. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-75 |
| No. 5. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-40 |
| No. 6. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-10 |
| No. 7. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 2-60 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்றிக் கவர்) | 2-95 |
| பிளாஸ்றிக் சிங்கள டயறி " | 1-75 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 2-60 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 4-50 |
| No. 1. பேர்ஸ் தமிழ் டயறி(பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-10 |
| No. 2. பேர்ஸ் திருக்குறள் டயறி " | 2-60 |
| No. 4. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-60 |
| No. 5. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-10 |
| No. 6. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-35 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 4-50 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 5-50 |
| ஜெம் டயறி (Gem Diary) | 1-35 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-05 |

இன்னும் பல உண்டு.

மற்றும் விபரங்களுக்கு

மெய்கண்டான் அச்சியந்திரசாலை

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன் : 79141

கிளை:

10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(போன் : 236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# இஸ்லாமிய இனத்துக்கு பேரபாயம் சூழ்ந்துள்ளது

## சிங்கள வெறியர்களின் சூட்டு வெளிப்படுகிறது

**ஈழம் வாழ் மக்கள் பேசும் மொழியால், மதத்தால் வேறுபட்டிருந்தாலும், அவர்கள் அனைவரும் ஒரே வயிற்றுப் பிள்ளைகளே என்றிருந்த காலம் மலையேறிவிட்டது. மூத்த சகோதரர் என்று மதிப்பளித்து வந்தோம் சிங்களவர்களுக்கு. ஆனால் அவர்கள் அதிகார வெறியில்—ஆதிக்க ஆசையில் இளைய சகோதரர்களான தமிழர்களையும் முஸ்லிம்களையும் அழித்தொழிக்கச் சதித் திட்டம் வகுத்துவிட்டனர்.**

**முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்த வாழ்வுக்கு வெடிப்பு வைக்க 'திக்கவாப்பியா'வைக் ஏற்படுத்தினர். கிருந்தையில் கிளர்ச்சி செய்து முஸ்லிம்களை இடம் கிளப்பி விட்டனர். இஸ்லாமிய இளைஞர்களே! உரிமைப் போர் தொடுக்க வேளை நெருங்கி விட்டது; விரைந்தோடி வாரீர் களம் நோக்கி!**

இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியிலேதான் முஸ்லிம்கள் கூட்டம், கூட்டமாக—அல்ல—ஒரு தொகை மக்களாக வாழ்கிறார்கள் என்பது பூகோளம் காட்டும் உண்மை. ஆகவேதான் கிழக்கிலங்கையென்றால், அது முஸ்லிம்களின் சொந்தச் சொத்து—என்ற பொது மரபுச் சொல் மக்கள் மத்தியில் என்றும் நிழலாடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கிழக்கிலங்கை விவசாயிகளுக்கென உருவாக்கப்பட்ட "சேனநாயக" சமுத்திரத்தை, பெரும் பாக்கியம் எய்தினோமே, என்று புளகாங்கிதம் அடைந்தனர் மக்கள். ஆனால்; அது வேளை நீர்வளமும், நில வளமும் செறிந்த கிழக்கு, இன்னுமேன் முஸ்லிம்கள் சொத்தாக இருக்க வேண்டுமென்ற குறுகிய புத்தியினாலோ, அல்லது இந்த இஸ்லாமியரை இல்லாதொழிக்க வேண்டும் என்ற தீர்க்காலோசனையாலோ, கல்லோயாப் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட குடியேற்றத் திட்டத்தில் சிங்களவரும் இடம் பெற வேண்டும் எனக் கோடிட்டனர்.

### ஏமாந்தனர் எம்மினத்தவர்

பகைமை தெரியாத இனம் இஸ்லாமியச் சமூகம், குறுக்கு நோக்கில்லாதவர்கள் முஸ்லிம்கள். இதனால் சரியென ஒப்பினர். ஈற்றில் சிங்களவர் குடியேறி இன்று கோட்டை — கொத்தளங்களுடன் திகழ்கின்றனர்.

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியதைப் போன்று, இன்று நிலை மாறி விட்டது. பன்நெடுங்காலமாகச் சொந்தமாகக் கொண்டு தங்கள் ஆட்சிப் பலத்தை உறுதிப்படுத்திய இடங்களை, ஒண்ட வந்த சிங்களச் சமூகத்தவர்க்கு ஒதுக்கிவிட்டு வாழ வழியின்றித் தவித்துத் தத்தளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது இஸ்லாமியர்களுக்கு. சொந்தங் கொண்டாடிய பூமிக்கு உரிமை கொண்டாட எங்கிருந்தோ ஓர் கூட்டம்

### "அஸாத்"

ஓடோடி வந்து விட்டது. அத்திவாரமில்லாத கதைகளைக் கொண்டு வரலாறு காட்டி, இடத்தை அபகரிக்க அரசு முனைந்துவிட்டது. பட்டத்துக்காகவும் பதவிக்காகவும் அரசினரை அண்டிப் பிழைக்கும் "தலைவர்கள்" என்ற வேடதாரிகள் உண்மையை மறைக்க உறுதுணை புரிந்து வருகின்றனர்.

### கல்லோயாப் பள்ளத்தாக்கில்...

கல்லோயாப் பள்ளத்தாக்கில் மெள்ள மெள்ள, சிங்களவர் பெருகிய வேளையில்—1961-ம் ஆண்டின் பிற்பகுதியில் தேர்தற் தொகுதிப் பிரித்தல் வேலையும் நடைபெற்றது. அதிலும் இஸ்லாமியர் பிராந்தியமாக இருந்த கிழக்கை—முஸ்லிம்களின் கோட்டையாக மிளிர்ந்த கல்முனை, நிந்தவூர், பொத்துவில், மட்டுநகர்த் தொகுதிகளை எந்த நீதிக்கோ—நியதிக்கோ பொருந்தாத வகையில் பல கூறுகப் பிரித்துச் சிங்களவருக்கென ஒரு தனித் தொகுதியை (அம்பாறை) தொகுத்து ஒரு சிங்களவரை அந்தப் பிராந்தியத்தின் மன்னவனாக மிளிரச்செய்தார்கள். அப்போதும் இஸ்லாமியர் சிந்தை தெளியவுமில்லை: தமது மூத்த சகோதரர்களென வாய்ப் பேச்சுப் பூசும் பசுத்தோல் போர்த்திய புலிக் கூட்டத்தை அடையாளம் கண்டு பிடிக்கவுமில்லை.

நம் சகோதரர்கள் என்ற பாச உணர்ச்சியைப் பருகி வந்தமக்கள்மத்தியில் இன்று பயங்கரச் சதித்திட்டத்தின் உண்மை உருவம் தெரிந்து விட்டது. இஸ்லாமிய சமுதாயத்தை அழிக்க முனையும் எரிமலையாகக் கொழுந்து விட்டு எரிகிறது—அதுதான் "திகவாப்பியா" என்ற தீப்பந்தம்.

என்றும் எதிர்பாராத—எவரும் கனவும் காணாத தீக்கவாப்பியா, சகோதர பாசத்தில் லயித்திருந்த மக்கள் கூட்டத்தைத் தீண்டியது. "வாழ்ந்த இஸ்லாமியரே! நீங்கள் வழியைப் பாருங்கள்! இங்குதான் எங்களது பாரம்பரிய "பன்சாலை" இருக்கிறது. எங்கள் வேந்தர்கள் வேதம் பாடியதும் இங்குதான். எங்கள் பரம்பரைச் சொத்து இதுவே" என்று, என்றுமே பேரம் பேசாத சகோதரச் சிங்களர்—இன்று பேரமும் பேசி, சீறியும் பாய்கிறார்கள். "குடியோடு கிளம்புங்கள் முஸ்லிம்களே" என்று பிடர் பிடித்துத் தள்ளுகிறார்கள். இது கிழங்கிலங்கையில் ஏற்பட்டுவரும் முதற் பெரும் இடி!

### இரண்டாவது இடி!

இரண்டாவது இடி, கிருந்தையில் விழுந்தது. சுமார் நூற்றைம்பது குடும்பங்கள் குடிபதியாய், வாழையடி வாழையாய், முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த இடம் கிருந்தை. அவர்கள் சொந்தமும் — பந்தமும் — சொத்தும் செறிந்த நாடு கிருந்தை. ஒரு தலைமுறையல்ல—பல தலைமுறையாகத் தன் பிள்ளைகளாகத் தழுவி வளர்த்தவள் கிருந்தைத் தாய். ஆனால் இன்று "கிருந்தை முஸ்லிம்களே! இது எமது சொந்தவூர், இங்கு உங்களுக்கு இடமில்லை. பிறப்புரிமையில்லை. குடியுரிமை இல்லை. கைக் கெட்டியதை எடுத்துக் கொண்டு எங்கேயாவது போய்த் தொலையுங்கள்" என்று எமது மூத்த சகோதரர்களான சிங்களச் செம்மல்கள் ஓலமிடுகிறார்கள். "ஓடிப்போ இல்லையானால் காலை ஒடிப்போம்" எனப் பயங்காட்டவும் முனைந்து விட்டார்கள்.

### நயவஞ்சகத்தின் பிரதிபிம்பம்

பெற்று வளர்த்த தாயை அவள் மடியிலே புரண்ட மகனுக்கு அன்னையென்றழைக்க உரிமையில்லையாம். வேறு எவளோ ஒருத்தியைத் தாயென்றழைக்கட்டுமாம். இதுதான் "சிங்களவர்" இஸ்லாமியருக்குக் கூறும் ஆலோசனை—அறிவுரை. சகோதரர்கள் என்று சொன்னவர்களதும் சொல்லிக்கொண்டிருப்பவர்களதும் நயவஞ்சக வார்த்தையின் பிரதிபிம்பம்.

இந்த நிலையில் நமது தலைவர்கள் செய்வதென்ன? கைகட்டி — வாய்புதைத்து — கண்மூடிக் காட்சியளிக்கிறார்கள். ஒருசிலர் வால் பிடிக்கிறார்கள். இதுவா புகழ் படைத்த இஸ்லாமியருக்குக் கிடைத்த பரிசு?

இன்னுமேன் இந்த இழிநிலை?

### புறப்பட்டுவிட்டது படை!

அன்று பாகிஸ்தானுக்காகப் புரட்சிக் கவிஞன் இக்பால் சங்கநாதம் எழுப்பியது போல் நாமும் சங்கூதுவோம், "புறப்பட்டு விட்ட படையே நமது படை". சமூகம் சாக்காட்டைச் சாடுகிறது. தலைவர்கள் எல்லாம் விலைபோய் விட்டார்கள். வழிகாட்டியவர்கள் எல்லாம் வாழாவெட்டியாக வாழ்கிறார்கள். பாதை விட்டவர்கள் எல்லாம் பதுங்கி விட்டார்கள். இதுவா உலகையாண்ட உத்தமர்களான இஸ்லாமியருக்குக் கிடைத்திருக்கும் பேறு?

பொறுத்திருந்த இஸ்லாமிய இளவர்களே இதோ—நாடுகாப்போம்—மதம் காப்போம்—உரிமை காப்போம் ஒன்றுபடுங்கள். காலங்கடந்தால் காரிருள் சூழ்ந்துவிடும். அவர்கள் செய்வார்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

**நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.**

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

## கவிதைப் பூங்கா

# தமிழ் சேனை எழுவது பார்!

—"ஆரையூர் அமரன்"—

செந்தமிழ் காத்திடவே—தமிழ்
சேனை எழுவதுபார்—எமை
நிந்தனை செய்தவரைப்—பிடி
நீறுகச் செய்திடவே.

அன்னை எம் தேன்தமிழை—வீணர்
ஆட்சியில் நீக்கி விட்டார்—அந்த
அற்பரை வீழ்த்திடவே—பகை
ஆயத்த மாகுதுபார்.

வெந்து மனம் குமுறி—விழி
செந்தணல் பந்தாக—பகை
வெற்பை நொருக்கிடவே—எரி
வேலினைத் தூக்குது பார்.

குருதிக் கொதிப்பினிலே—கோபக்
குரலும் ஒலித்திடவே—பகைக்
கும்பல் கொடுமையினை—ஆழக்
குழியில் புதைப்பதற்கே.

பேடிச் செயல் புரிவார்—பொந்தில்
ஓடி ஒதுங்கிடவே—இங்கு
பேரிடி ஓசையிலே—படை
பேரிகை கொட்டுது பார்.

கருவை அறுக்கவரும்—கடைசிக்
கட்டம் நெருங்கிடவே—தன்
பொறுமை இழந்திங்கே தமிழ்
பூமி முழங்குது பார்.

தீரச் சரிதையினைத்—தமிழ்
வீரக் கவிதையிலே விழி
நேருக்கு நேர்பார்த்தே—கவி
சிருக்குச் சீர்வரைய.

ஊமைத் தமிழரெல்லாம்—இனி
உரிமைக் குரலொலிக்க—வெளி
உலகச் சனங்களெல்லாம்—இனி
உண்மை நிலையறிய (செந்தமிழ்)

# போர்ப் பரணி

—சின்னத்தம்பி-சிவீ—

போர் கொட்டு மோசைக்குப் புகலிடமிங் கில்லை
யார் கெட்டுப் போனவர் தார்கட்டு மார்பா!
வேல் தொட்டு வாளிட்டுப் போரிட்டு வாடா
யாரிட்ட காலையென் றேயவனி கொட்ட.

வடுகண்டால் உன்முதுகில் வசைகூறுன் நாடு
வடு கொண்டு வாளோடு உடல்நூறு வெட்டி
கடல்விண்ட படைகண்டு கரைகொண்ட தமிழா!
உடல்தந்து உயிர்தந்து உணர்வெல்லாம் தந்தோம்.

நடைகண்டு தடைவிண்டு நடைபோடும் படையில்
இடையுண்டு; மடநெஞ்சின் விடையுண்டு நூறு
எடைகொண்ட தமிழன்னை நிலைகண்டு வாடா
அடமைந்தா; நடமுன்னே படையேகும் வழியில்.

முடியில்லை *மூன்றுண்டு; மடிவில்லை வழியுண்டு
விடிவில்லை உரநெஞ்சில்; படிவில்லை இழிவுண்டு
திறனுண்டு செயலினில்; ஜெயமுண்டு பயமில்லை
அறனுண்டு "தமிழன்னை" அரசென்று ஆளவே!

* 3 வர்ணம் (கொடி) 3 எழுத்து (எஸ். ஜே. வி.)
3 எழுத்து (தமிழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி-இராமநாதன்,
மாத்தளை

கே: பெண்களுடன் பஸ்களிலே முட்டுப்பட்டு யாரோ ஒருவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டு விட்டதாம். இந்த அப்பட்டமான பொய்யை நம்பத்தான் முடியுமா குயுக்தியாரே?

ப: ஏன் முடியாது? குறும்பு செய்யும் ஆடவர்களின் முதுகைப் பதம் பார்க்கும் கலைகள் எத்தனையோ வீராங்"கனை"களிடம் உண்டு.

ஃ

க இராசநாயகம்,
மட்டக்களப்பு

கே: என் காதலி எனக்கு "அண்ணு" என்று காதல் கடிதம் எழுதுகிறுர். ஆனல் நான் சொன்னேன் எனது பெயரைச் சொல்லிக் கடிதம் எழுதும்படி, இதற்கு மறுத்துவிட்டார். இதற்கு என்ன வழி செய்வது?

ப: உங்கள் காதலி கெட்டிக்காரி. "அண்ணு" என்றே எழுதட்டும். தருணம் வரும்போது அவரே தக்கபடி மாற்றிக்கொள்வார்.

ஃ

எஸ். கனகசூரியம், விரமுனை

கே: இலங்கையில் இருந்து இந்தியர்கள் எல்லோரையும் உடனடியாக வெளியேற்றினுல் இலங்கையின் நிலை என்னவாகும்?

ப: நாடு "திவாலா"கும். பொருளாதாரம் கவிழ்ந்து விடும். ஆட்சி வீழ்ச்சியடையும்.

ஃ

சிவகுலோ, மண்டூர்

கே: ஒரு மதத்தில் படித்து, ஒரு மதத்தில் தொழில் புரிந்து, ஒரு மதத்தில் கலியாணம் முடிக்க மதம் மாறும் வாலிபர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மனிதனுக்காகவே மதம்—மதத்துக்காக மனிதன் இல்லை என்ற எண்ணம் கொண்டவர்கள் அவர்கள்.

ஃ

"மணிமாறன்"
கொழும்பு

கே: திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்மூச்சான திராவிட நாடு பிரிவினையைக் கைவிட்டதை "அண்ணு" அவர்கள் அறிவித்தவுடன் எல்லாரும் கேலியும், கிண்டலும் செய்கிறுர்களே?

ப: சட்டத்துக்குப் பயந்தா கோரிக்கையைக் கைவிட்டார்? சட்டத்துக்குப் பயந்தால் அரசியற் சட்டத்தையே எரிக்க எப்படி முன் வந்தார்! அவர் செய்ததெல்லாம் தி. மு. க. வை ஒழிக்கக் காங்கிரஸ் மேலிடம் செய்த சதியை நிர்மூலமாக்கியதுதான். தி. மு. க. வின் இலட்சியம் பூர்த்தியாகும்போது தனித் திராவிட நாடு அமைப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: சதா சிற்றின்பங்களைப் பற்றியே அலட்டிக் கொண்டிருக்கும் சில தமிழ் வாலிபர்கள் எமது அவல நிலை பற்றிச் சற்றும் உணராதிருப்பதேன்?

ப: உணர்ந்தால் தமிழினத்துக்கு இன்பமும் தங்களுக்குத் துன்பமும் வந்துவிடுமே என்ற பயம்.

கே: தன்மானமற்ற சுய இச்சைகளைத் தமிழ் மக்கள் பெரும்பான்மைப் பலத்துடன் பெட்டிசன் மூலம் பதவியிலிருந்து விரட்டியடிக்க முடியாதா?

ப: முடியாது. வாக்காளர் தங்களுக்கு வேண்டாத போது தங்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகளைப் பதவி நீக்கம் செய்யும் மேலான ஜனநாயகம் இலங்கையில் கிடையாது.

கே: பெருத்த அயோக்கியர்கள் சிரித்தவண்ணம் இருப்பதேன்?

ப: அயோக்கியத்தனத்தை மறைக்கச் சிரிப்பு பெரிதும் உதவுகிறது.

என் எம். எம். ஹனிபா,
கண்டி

கே: காதலில் தோல்வியடைந்து தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனமா, புத்திசாலித்தனமா?

ப: கோழைத்தனம். காதல் என்பது ஆற்று வெள்ளம். நீந்தப் பழகியவர்கள் ஒரே தடவையில் அதைக் கடந்துவிடுவர். ஆனல் "புதுசு"கள் தோல்வியைச் சட்டை செய்யாது பன்முறை நீந்தினுல்தான் அக்கரையை அடைய முடியும். சுமார் ஒரு டசன் முறையேனும் முயற்சி செய்து, காதல் வெள்ளத்தைக் கடக்க முடியவில்லையேல் அது தற்கொலைக்குத் தக்க காரணமாகலாம்.

ஃ

"வடலூரான்"
அனலைநகர்

கே: பாதயாத்திரை முடிவடைந்தவுடன் தமிழரசுக்கட்சியினர் நடத்தும் அடுத்த போராட்டமென்ன?

ப: முதலில் நீங்கள் போராட்டத்துக்குத் தயாரா? என்ன என்று கேட்பதை விட்டு, எப்பொழுது என்று கேளுங்கள். டிசம்பர் கடைசியில் போர்த் திட்டம் உங்கள் கைக்குக் கிடைக்கலாம்.

ஃ

ஆ லோகேஸ்வரன்,
இரத்தினபுரி

கே: மொழி வெறிக்கும் மொழிப் பற்றுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: மொழி மட்டுமின்றி வேறு எதிலாவது [illegible] றுப் போகும்போது [illegible] உண்டாகும், வெறி கூடினுல் பைத்தியம் ஏற்படும்.

ஏழாலை மேற்கு,
கருணைக்கடல்

கே: திரு. பீட்டர் கெனமன் தற்பொழுது என்ன செய்கிறுர்?

ப: சீன ஆதரவாளர் கோஷ்டிக்குக் கிடைக்கும் பண உதவியைக் கண்டு அதிர்ச்சியடைந்துபோயிருக்கிறுராம்.

கே: திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வெளிநாட்டுக்கு யாத்திரை செய்து திரும்பி வந்து விட்டார். இப்பொழுது தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து உள்நாட்டுப் பாதை யாத்திரை செய்வாரா?

ப: அதற்கான துணிச்சல் இனிமேல்தான் ஏற்பட வேண்டும்.

ஃ

கி. ரா. தே. தமிழ்ச்செல்வி,
பொரலக்கடை

கே: தமிழ் நாட்டில் நடைபெறும் இந்தி எதிர்ப்புப் போ[illegible] தமிழ் நாட்டில் முதன் மந்திரியாகத் திரு அண்ணாத்துரை வருவாரா?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: அண்ணு தமிழகத்தில் முதன் மந்திரியாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் வெற்றி தோல்வியைப் பொறுத்த விஷயமன்று. அடுத்த பொதுத் தேர்தலில் தி. மு. க. அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றினுல் அண்ணு முதன் மந்திரியாவர். எனவே தி மு. க இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மட்டுமின்றி பெரும் தேர்தல் போராட்டத்தையும் நடத்த வேண்டியிருக்கிறது.

ஃ

தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்

கே: திருமலையில் நடந்த ஒரு கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை நடத்த முடியாதென்று கூறினுரே, என். எம். பெரேரா ஆட்சியை நடத்துவாரோ?

ப: பாவம்! அவரும் கடந்த 28 ஆண்டுகளாக ஆட்சியை நடத்த முயற்சி செய்கிறுர்; முடியவில்லையே!

ஃ

இ. பாலசுப்பிரமணியம்,
அட்டன்

கே: இலங்கை-இந்தியப் பிரச்சினையை ஐக்கியநாடுகள் சபையால் தீர்த்து வைக்க முடியுமா? எவ்வாறு?

ப: முற்றிலும் தீர்க்க முடியாது. இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்கள் கையில் தான் பிரச்சினையின் இறுதித்தீர்வு இருக்கிறது.

ஃ

தி. மதுரம், அளவெட்டி.

வண்டி உருள அச்சாணி தேவை. அதுபோல் தமிழர் உத்தியோகம் பார்த்து உயர் பதவி அடைய எது தேவை?

ப: தனியரசு தேவை.

கே: சிங்களம் கற்றவருக்கு உயர் பதவி கொடுக்கப்படும் என்று கல்வி மந்திரி கூறியுள்ளார். இது உண்மையாக இருக்க முடியுமா?

ப: அப்படிக்கூறியிருந்தால் "சிங்களவர்" என்பதே அதன் பொருள். சிங்களவரென்றுல் "கொவிகம"குலத்தைச்சேர்ந்த, கண்டிய ரதல வம்சத்தைச் சேர்ந்த, பௌத்த மதத்தைச்சேர்ந்த சிங்களவர் என்பது பொருள்.

கே: பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதனுலுண்டாகும் பயன் என்ன?

ப: மக்களின் மனப் போக்கை ஆளும்கட்சிக்குச் சாதகமாகத் திருப்பி விடலாம்.

கே: நீர் ஒரு கள்ளத்தோணியெனச் சிலர் கூறுகிறுர்களே, அது உண்மையா?

ப: நான் தோணி அல்ல—மனிதன்.

கே: அரசாங்கத்துக்காகப் பந்தம் பிடிப்பவர்களின் நிலைமை படுதோல்வியடைகிறதே, காரணமென்ன?

ப: தவறு—பந்தம் அவர்களின் சொந்த நிலையை உயர்த்திவிடுகிறதே!

கே: திருமலை இடைத் தேர்தல் பற்றி நீர் கூறும் அபிப்பிராயம் என்ன?

ப: மூதூர், ஊர்காவற்றுறை மக்களையும் ஒரு படி மிஞ்சி விடுவார்கள் திருமலை மக்கள், என்பது அடியேன் கருத்து.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை

கே: தமிழ் நாட்டிலிருந்து தமிழில் பொறித்த அஞ்சலட்டை ஒன்று எனக்கு வர வேண்டும். அதில், அஞ்சல் தலையிலும் தேதி முத்திரையிலும் (ஊர் பெயர்) தமிழில் இருக்க வேண்டுமென கனவு காண்கிறேன். என் கனவு நினைவாகுமா?

ப: நனவாகும், அண்ணுவின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற்றுல்.

ஃ

கே திராவிடத்தம்பி,
உந்துகொடை

கே: த. அ. கட்சி சிங்களத் திணிப்பைப் பகிஷ்கரிக்கின்றதா? சிங்களம் படிப்பதைப் பகிஷ்கரிக்கின்றதா?

ப: சிங்களம் கற்பிப்பதும் சிங்களத் திணிப்பின் ஓர் அம்சம் என்பதை மறந்து விட்டீர்களே.

## உதவாத ஆட்சி...!

—"பாண்டியூரன்"—

மக்களுக்(கு) உதவாத ஆட்சி—எந்த
மண்ணிலும் நிலையாது; மனுகண்ட காட்சி!
வக்கரிப் போர்க்கிது தாழ்ச்சி—வீர
மகனிடம் அணுகாது அவரிடும் சூழ்ச்சி!

ஆட்சிக்கு உதவாத நீதி—இந்த
அகிலத்தி லுளதாகின் அழியட்டும் சாதி!
மீட்சிக்கு உயிரென்ன போதி!—அட
விடிவுக்கு முடையாகின் தமிழென்ன ஆதி?

தமிழுக்கு உதவாத பீடம்—மண்ணில்
தரைமட்ட மாகட்டும்! தமிழ்தந்த பாடம்;
தமிழெங்க ளுயிரென்னு(ம்) நாட்டம்—உடல்
தணலாக வெந்தாலு(ம்) தணியாபோ ராட்டம்!!

நிலவுக்கு உதவாத காதல்—இன்ப
நிறைவுக்கு மலராது விழிதந்த மோதல்;
உலகுக்கு உதவாத ஞானம்—ஏட்டில்
உடலோடு நடமாடி வளராது மானம்!

பயிருக்கு உதவாத வேலி—காத்தும்
பசிதீர நல்காது பயனென்னும் கூலி!
உயிருக்கு நஞ்சூட்டு(ம்) நீலி அற்ப
உடல்தந்து உறவாடும் சுகமன்றே கேலி!

மறவர்க்கு மரணத்தி லின்பம்—உயர்
மானத்தி(ல்) இழிவாகின் மடியாது துன்பம்!
புறமென்ற கதைகூறும் இன்னல்—எங்கள்
புகழுக்கு அழியாத சுவையூறும் கன்னல்!

உணர்வுக்கு உதவாத கண்கள்—இந்த
உடலோடு நிலையான உயிரற்ற புண்கள்!
கணவர்க்கு உதவாத பெண்கள்—அலை
கடல்சூழ ஆண்டாலும் கதியற்ற மண்கல்!





சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்

# தமிழகத்தில் பொலீஸ் காட்டு தர்பார்!

# அறிஞர் அண்ணா சிறையில்!

## எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

இம்மாதம் 17ந் திகதி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்க விருந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தை யொட்டி, தி. மு. கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், சனிக்கிழமை (16-11-63) மத்தியானம் 12-30க்கு சென்னையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவருடன் வேறு சில தலைவர்களும் தொண்டர்களும் உட்பட சென்னையில் மட்டும் 261 பேர் கைது செய்யப்பட்டனர். அண்ணா அவர்களை இரண்டு வாரங்கள் காவலில் வைக்கும்படி பொலீஸ் கமிஷனர் உத்தரவிட்டுள்ளார்.

தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை 17ந் திகதியன்று, அரசியல் சட்டத்துக்கு எரியூட்டுவதன் மூலம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பித்து வைப்பதாக இருந்தது. அதையொட்டி சென்னையில் ஊர்வலங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் பொலீசார் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

சென்ற 14ந் திகதி தொடக்கம், தி. மு. கழகத் தலைவர்களையும் தொண்டர்களையும், பொலீசார் தேடிக் கைதுசெய்து வருகின்றனர். திரு. சி. பி. சிற்றரசு, திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி. சத்தியவாணி முத்து உட்பட பலர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

தி. மு. க. தலைவர்களையும் தொண்டர்களையும் இரவோடிரவாகக் கைது செய்ததைக் கண்டித்து, அண்ணா அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில், இது பரப்பூட்டும் தேவையற்ற செயல் என்று கூறியிருக்கிறார். "நாங்கள் சட்ட எரிப்பு போராட்டம் எப்போது, எங்கே நடைபெறும்என்பதைத் தெரிவித்திருந்தும், இப்போது கைது செய்தது வேண்டாத எழுச்சியை உண்டாக்கும்" என்று கூறியிருக்கிறார்.



திரு. சி. என். அண்ணாத்துரை

சென்னையில் மட்டுமன்றி தமிழகம் பூராவிலும், பொலீஸ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கோவை, காஞ்சீபுரம், சென்னையை அடுத்துள்ள சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் 144 சட்டமும், மதுரை, வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் தடைச் சட்டமும் அமுலாக்கப்பட்டுள்ளன. சென்னையில் பொலீசார் மிருகத்தனமாக நடந்து வருவதாகவும், கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கழகத்தவரைக் கைது செய்வதாயும் அறியப்படுகிறது.

### வேலூர் சிறையில்

கைது செய்யப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மத்திய சிறையிலுள்ளார். அவர் வேலூர் சிறைக்குக் கொண்டு போகப்படுவார் என்றும் தெரிகிறது. குற்ற நடைமுறைச் சட்டம் 151வது பிரிவின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலீஸ் கமிஷனர் தெரிவித்தார்.

### எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

தி. மு. கழகத் தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக விவாதம் நடத்த ஒத்திவைப்புப் பிரேரணையொன்றை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் கொண்டு வந்தார். அதை சபாநாயகர் செல்ல பாண்டியன் தள்ளுபடி செய்தார். அதை ஆட்சேபித்து, தி. மு. க., சுதந்திரா, 'போர்வாட்

(5-ம் பக்கம் பார்க்க)

### தடை மீறப்படலாம்

தி. மு. க. சட்ட எரிப்பு போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே தலைவர்களைக் கைது செய்து விட்டதனால் தமிழகம் எங்கணும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. தடையை மீறப்போவதாக அடிக்கடி கழகத் தோழர்கள் தலைமைப் பீடத்தை நச்சரித்துக் கொண்டுள்ளனராம்.

போராட்டத்தில் காலாகாலத்தில் கலந்து கொள்ளப் போவதாக அறிவித்தவர்களைத் தவிர ஏனைய புதிய தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் தடை மீறலாம் என்று அறிஞர் அண்ணா அறிக்கை வெளியிட்டிருக்கிறார், என்று தெரிகிறது.

# "வவுனியாவில் தமிழ் அரச கரும மொழி"

வவுனியாவில் அரசாங்க அலுவல்கள் அனைத்தும் தமிழில் மட்டுமே நடைபெறுவதாக "தவஸ" 15-11-63ம் திகதி இதழில் கூறுகிறது.

"தவஸ" வெளியிட்டுள்ள செய்தி மேலும் கூறுவதாவது:

"வவுனியா மாவட்டத்தில் வவுனியாக் கச்சேரி தொடக்கம் கிராம சேவகரின் அலுவலகம் வரை அரசாங்கக் கருமங்கள் அனைத்தும் தனித் தமிழிலேயே நடைபெறுகின்றன.

வவுனியாவில் அரசகரும மொழி "தமிழ்" என்று கூறுவதில் தவறில்லை.

இன்று அங்கு கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களில் ஒரு சத விகிதம் பேர் கூடச் சிங்களவர்கள் இல்லை. ஜனவரி முதற் திகதிக்கு முன்பு போதுமான சிங்கள ஊழியர்களை அங்கு நியமனம் செய்தாலும் அவர்கள் தங்குவதற்கு வசதியோ, இதர வசதிகளோ அங்கே அவர்களுக்குக் கிடைக்க முடியாது.

ஜனவரி 1ம் திகதி தொடக்கம் இலங்கையில் இதர பகுதிகளில் சிங்களம் அரசகரும மொழியானாலும், வவுனியாவில் மட்டும் அப்படி நடைபெறுமா என்பது சந்தேகமே.

இன்னும் அநேக ஆண்டுகளுக்குச் சிங்களம் வவுனியா மாவட்டத்தில் அரசகரும மொழியாக முடியாதென்பதற்கான நிலை ஏற்பட்டுள்ளது. கச்சேரியிலுள்ள பெயர்ப் பலகைகளில் கூட முதலிடம் தமிழுக்குத்தான் —சில பெயர்ப்பலகைகளில் தமிழ் மட்டுமே இடம் பெற்றுள்ளது."

### இலங்கை தமிழரசாகலாம்?

"இலங்கை, சீனர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு தமிழரசாகலாம்" என்ற தலைப்பிட்டுத் திரு. சோமவீர சந்திரசிரியின் 'நிதஹஸ' பத்திரிகை இவ்வாறு வெளியிட்டுள்ள செய்தியில், இலங்கையிலுள்ள நாம் தமிழர் இயக்கத்தின் மீதும், சீனக் கொம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீதும் இரகசியப் பொலிஸாரின் கழுகுக் கண்களைத் திருப்பி விட வேண்டியது திருமதி சிறிமாவோ

### சிங்கள இதழ்களில்...

பண்டாரநாயக்காவின் கடமையென்று கூறுகிறது.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"இலங்கைத் தோட்டப் பகுதிகளிலுள்ள நாம் தமிழர் இயக்கம் இந்திய 'நாம் தமிழர்' இயக்கத்தின் கிளையாகும். இந்திய நா. த. இயக்கம் நேருவின் இந்துஸ்தானத்திலிருந்து பிரிந்து தனித் திராவிடஸ்தான் நிறுவும் பொருட்டுப் போர்க் கொடி உயர்த்தியுள்ளது. இத்திராவிடஸ்தானுக்கு இலங்கையையும் இணைத்துக் கொள்வது இந்தியத் தமிழர்களின் முயற்சியாகும்.

இரகசியமாகத் திட்டப்பட்டுள்ள இத்திட்டம் வெற்றி பெறின், வட இலங்கைச் சமஷ்டிவாதிகளும், மலைநாட்டுத் தமிழர்களும் ஒன்றுசேர்ந்து இங்கே சிங்களவர்களை நசுக்கும் போது தென்னிந்தியாவில் இந்துஸ்தான் நசுக்கப்படலாம். இந்த இயக்கம் நேருவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க சீன அரசாங்கத்துக்கும் [illegible] தமிழர்கள் சீனர்களுடன் சேர்ந்து நேருவின் அரசாங்கத்தைத் தோற்கடித்துச் சமஷ்டி முறையில் திராவிட அரசு ஒன்றை நிறுவுவதற்கு இடமேற்படலாம். அப்படி ஏற்பட்டால் இலங்கையின் கதியென்ன? சீனர்களின் உதவியுடன் தமிழரசு நிறுவிக்கொள்ளும் தமிழர்களின் "பலவேகயா"வுக்கு இலங்கை அடிபணிய நேரிடும்.

இதனை கவனிக்க வேண்டிய பொறுப்பு சிங்களவர்களின் பாதுகாப்புப் பெண் தெய்வமான திருமதி சிறிமாவோவைச் சார்ந்ததாகும்"

"வட, கிழ் மாகாணங்களில் அரசாங்க மொழி பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது. இவ்விரு மாகாணங்களிலும் இப்பொழுது அரச கரும மொழி தமிழே. அங்கே அரசாங்க அலுவல்கள் அனைத்தும் தனித் தமிழ் மொழியிலேயே நடைபெறுகின்றன. இதனால் அந்தப் பிரதேசங்களில் வதியும் சிங்கள மக்களுக்குப் பெரும் இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறது" என்று "சவஸ" (20-11-63) எழுதியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் சிங்களவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தமிழில் வழங்கப்படுவதே'சவஸ' இப்படிக் கூறக் காரணமாகும்.

### நாம் தமிழர் ஊர் நாசமாம்

"சவஸ" பத்திரிகை (20-11-63) "பொலீஸ் நாம்

(13-ம் பக்கம் பார்க்க)

### தமிழை ஒழிக்க தமிழர் முயற்சி

யாழ்ப்பாண மாவட்டத்தில் முக்கிய பதவி வகிக்கும் அரசாங்க ஊழியர் ஒருவர் பௌத்தர்களுக்கு மட்டுமே ஆட்சியாளரால் நன்மை கிடைக்கும் என்று தெரிந்ததும், புத்தர் சிலை வைத்து வணங்கி வருகிறாரென்றும் பெரும்பான்மையான தமிழ் அரசாங்க ஊழியர்கள் முப்பது வயதிற்குள்ளேயே தங்கள் பதவிகளை இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ள இவ்வேளையில், இவர் அறுபது வயதைத் தாண்டியும் ஒருவருட காலப் பதவிநீடிப்புப் பெற்றுள்ளாரென்றும் அறியப்படுகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள கல்லூரிகளில் சிங்களத்தைப் போதனா மொழியாக்கும் முயற்சிகளில் இவர் இப்பொழுது தனது கவனத்தைத் திருப்பியுள்ளார் என்று கூறப்படுகிறது. இந்த முயற்சி வெற்றி தரத் தவறின், கல்லூரிகள் தோறும் சிங்களத்தைக் கட்டாய மொழியாக்குவது, என்பது இவருடைய விரதமாம்.

இம் முயற்சிக்கு உடந்தையாகச் செயல்படுவதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் உயர் பதவி வகிக்கும் ஒரு சிங்கள அதிகாரியின் உதவியை நாடியுள்ளார் என்று தெரிய வருகிறது. தினமும் இந்தச் சிங்கள அதிகாரியைச் சந்தித்து அறையைப்பூட்டிவிட்டு, இவர்கள் இருவரும் இரகசிய சம்பாஷணைகளில் ஈடுபட்டுவருவதாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. இந்தச் சிங்கள அதிகாரி யாழ். நகருக்கு மாற்றலாகி வரும்பொழுது இத்தகைய வகுப்புவாத நோக்கத்துடன் வரவில்லை என்றும், இந்தத் தமிழ் அதிகாரியின் தொடர்பே அவரை முழு வகுப்புவாதியாக மாற்றியுள்ளது என்றும் சிலர் கூறுகின்றனர். இந்த அதிகாரியின் நடவடிக்கைகளை மாநகர சபையினர் உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்என்று மக்களிடையே கருத்துநிலவுகிறது.


## ஜீ. சீ. ஈ. 101 வினா விடைகளும் கடந்த கால வினா விடைகளும்

ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைந்தோரிற் பெரும் பான்மையோர் எமது புத்தகங்களைப் படித்தவர்களே.

| | |
|---|---|
| தமிழ்ப் பாஷை | 3-75 |
| எண் கணிதம் | 3-75 |
| குடியியல் | 3-75 |
| சரித்திரம் | 3-75 |
| பூமிசாஸ்திரம் | 3-75 |
| சுகாதாரம் | 3-75 |
| ஆங்கிலம் | 3-75 |
| இந்து சமயம் | 3-75 |
| பயிற்சிச் சிங்களம் | 3-75 |

வி. பி. பி. கிடையாது
தபாற் செலவு
ஒரு புத்தகம் 50 சதம்
மேற்படும் ஒவ்வொரு புத்தகத்திற்கும் 25 சதம்

அற்லஸ் ஹோல்,
723, மருதானை றோட்,
கொழும்பு.



## மந்திர சக்தியை நிரூபிப்பதற்கு,

உங்களுக்கு நிறைவேறவேண்டிய காரணங்களை நிறைவேற்றித்தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. உங்கள் காரணங்களை அறிவிக்கவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

பி. எம். திசாநாயக்க,
கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையிழந்தோர் அனைவரும் ஒரே அணியில்

## அநியாயச் சட்டங்களை ஒன்றுபட்டு எதிர்ப்போம்

[நூரளை பலைச் செல்வன்]

மலையைக் குடைந்து வளைந்தோடும் பாதைகளை அமைத்தான் தமிழன்; பாறைகளைத் தகர்த்துக் கூரை வீடுகளைக் கட்டினான் தமிழன்; காடுகளையும், மேடுகளையும் திருத்தி ஏடு பாடும் சோலைகளாக்கினான் தமிழன்; நாடு காக்கும் அரசுக்கு செல்வத்தை அள்ளி அள்ளி ஈந்தான் தமிழன்; மாக்கள் மேயும் "மலை" கட்டினை மக்கள் வதியும் கலை வீடாக மாற்றினான் தமிழன். ஆனால் அவனுக்கு இன்று உரிமைகளில்லை.

பிறந்த இவ்வூரிலே வாழும் உரிமையில்லை; வாய் திறந்தபோது பேசிய தாய் மொழியில் பேசும் உரிமையில்லை, வாழ்வை வளம்படுத்தும் பொருள் ஈட்ட, வேலை பெறும் உரிமையில்லை, இல்லை... இல்லை... என்ற சொல்லிற்கே பஞ்சமில்லை.

### உரிமை கேட்டால்...

இவ்வரசு நம்மை, இந்நாட்டின் அடிமைகளாகவும், வெறும் கூலிகளாகவும், நாதியற்றவர்களாகவும், நாடோடிகளாகவும் வாழ வேண்டுமெனத்தான் விரும்புகிறது. எப்படி முடியும்?

நமக்கு எதிராக அரசாங்கம் இடும் சட்டங்களைக் கண்டித்தால் உதை, அடி, சித்திரவதை! ஏவி விடப்பட்ட படையாம் கூலிகளின் காடைத்தனம், வீடுகளுக்கு தீ வைப்பு; பெண்களைக் கண்டால் துச்சாதனனின் துயில் உரித்தல்—கற்பழிப்பு -கடத்தல்; கொள்ளை—இவை தான் கிடைக்கின்றன.

### அவர்களைக் கொழுக்கச் செய்வது எது?

உரிமைகளை இழந்து வாழும் தமிழர்களை மிரட்டும் அரசும், அவர்களின் அடியை வருடும் காரியத் திருடர்களும்; நம்மை வெட்டிக் கட்டி கொடுமை புரியும்—கூலிக்கு ஏவல் புரியும் காடையர்களும்; நம் மண்டைகளில் மொட்டுக் கொடுத்து எலும்புடைக்கும் நகர காவலர்களும் உண்டு களித்துக் கொழுப்பது எதனால்? அவர்களை ஆணவத்தின் பீடத்திலே அமரச் செய்தது எது?

தமிழன் சிந்திய வியர்வை, கொட்டிய இரத்தம், தேயிலை, இறப்பர் தூளுக்கு உரமான உடல்கள், தமிழனின் உழைப்பு, மழையிலும், வெயிலிலும், ஆருத் துயரோடு, உழைத்து, உழைத்து உருவிழந்து அள்ளி, அள்ளி தந்த செல்வம் ஆகியவை தான்.

### நம் கையே நம்மை அழிப்பதா?

நமது வியர்வையே, நமது இரத்தமே, நமது உழைப்பே, நமது செல்வமே நம்மை அழிப்பதா? சே...சே...நம் கையே நம்மை வெட்டிக் கொள்வது போலல்லவோ இச் செயல். அறியாமையன்றோ?

அப்படியானல் அந்த அறியாமைக்குக் காரணம் என்ன? நமது உழைப்பாலே ஆனந்த வாழ்க்கை வாழும் அரசியலார் நம்மை அடக்கி ஆளக் காரணம் என்ன?

### கட்சிகளால் ஒற்றுமையின்மையே

கட்சிகள் காரணமாக நாம் ஒற்றுமையின்றிப் பலவாறு பிரிந்து வாழ்வதே காரணமாகும்.

கட்சிகளால் இனி நாம் என்றுமே ஒன்று கூடி வாழ மாட்டோம் என்ற துணிவால்தான் நம்மை அடக்கி, ஒடுக்கி, நமது உழைப்பால் நம்மையே ஏமாற்றி வாழ்கிறது சீறும் சிங்கள அரசு. ஒற்றுமை நீங்காது நாம் வாழ்ந்தால் அடிமைக் கூலிகளாக நடத்தப்படுவோமா?—வாழ்வோமா?

### "உரிமையிழந்தோர்" ஒன்று திரளுவோம்!

கட்சிப் பிளவால் நாம் சண்டையிட்டு வாழ்கிறோம்; உற்றார், பெற்றார், உறவினர் எல்லோருமே கட்சிப்பேதம் பேசி, ஒற்றுமையின்றி வாழ்கிறோம்.

நமக்குள் வேறுபட்ட பல கொள்கைகள் இருக்கலாம், கட்சிகள் இருக்கலாம். ஆனால் பொதுப்படையில் நாம் பல உரிமைகளை இழந்தவர்கள். மொழி, பிறப்பு, வாக்குரிமை பிரச்சினைகளில் நாம் என்றைக்கும் ஒரே அணிதான்.

அரசும் உரிமை அற்றவர்களென, பொதுப்படையாகத்தான் கூறும். இவர்கள் அஸீஸ் கட்சியினர், அவர்கள் தொண்டமான் கட்சியினர் எனப் பேதம்கண்டு, ஒவ்வொரு கட்சியினருக்கும் உரிமை பறிக்கும் வெவ்வேறு சட்டங்களை இடாது.

எனவே, மற்றவர்கள் நம்மைப் பார்த்து 'உரிமையற்றோர்' என ஒரே அணியாக வைத்சுக் கூறும்போது, நாம் மாத்திரம் ஏன் பிரிந்து, பேதத்தோடு வாழ வேண்டும்?

ஆதலால், தோழர்களே! 'உரிமையிழந்தோர்' என்ற முறையில் ஒரே அணியில் திரள்வோம். அரசுக்கு அடிபணியும் தலைவர்கள் ஒருபுறம் இருக்கட்டும். உரிமைக்காகப்போராடும் தமிழரசு இயக்கத்தின்கீழ் ஒன்று திரள்வோம்!

## மலைநாடு

### பெ. மத்துகமத் தோட்ட வேலை நிறுத்தம் வாபஸ்

#### பேச்சு வார்த்தை நீடிக்கிறது

நூலவாக்கொல்லையைச் சேர்ந்த பெரிய மத்துகமத் தோட்டத்தில் இ. தொ. கழகத்தால் இரு வாரங்களாக நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் 16-11-63 ந் திகதி முடிவுற்றது.

தோட்டத்தில் புல் வெட்டுக் கொந்திராத்து வைத்திருந்தவர்களுக்குப் புதுவிதமான கருவிகளைக் கொண்டு புல் வெட்டுமாறு தோட்ட நிர்வாகம் உத்தரவிட்டதிலிருந்தே இத்தகராறு ஏற்பட்டது.

இது சம்பந்தமாக அட்டன் உதவித் தொழில் கமிஷனரால் நியமனம் செய்யப்பட்ட சபையின் சிபார்சும் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பதாகவே இருந்தமையினல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

ஒரு ஏகரா புல் வெட்டுக்குப் 10 பேருக்கு 7 பேருக்குரிய சம்பளத்தைப் பிரித்துக் கொடுக்கவே நிர்வாகம் முயற்சி செய்தது. ஏழுபேர்களால் ஒரு ஏக்கரில் புல் வெட்டுவது சாத்தியமல்ல. அந்த நிலை ஏற்படும் போது மணிக்காசு அடிப்படையிலே பேர் போட முயன்றது நிர்வாகம்.

இதன்படி தொழிலாளர்களுக்குக் குறைந்த சம்பளமே கிடைக்குமாதலின் தொழிலாளர் ஆட்சேபித்து வேலை நிறுத்தம் செய்தனர்.

இத்தகராறு பெரிய மத்துகம தோட்டத்திற்கு மட்டுமின்றி, இதர பல தோட்டங்களுக்கும் பொதுவான கோரிக்கையாகும்.

தொழில் இலாகா அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, கடந்த சனிக்கிழமை தோட்டத்துரைமார் சங்கத்துடனும் இ. தொ. கழகப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்தினர்.

ஆகவே வேலை நிறுத்தத்தை மேலும் நீடிக்காமல், தொழிலாளர்கள் கடந்த சனிக்கிழமை வேலைக்குத் திரும்பியுள்ளனர். முதலாளிமார் சங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லையேல், தகராறு தொழில் கோர்ட்டின் விசாரணைக்கு விடப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பகிஷ்கரிப்பின் எதிரொலி

### சிங்கள அமுலுக்கு தொண்டர் படை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்பார்த்த அளவு சிங்களத்தைத் தீவிரமாக அமுல் நடத்த முடியாது போய்விட்டது. அரசாங்க அதிபர்கள் அறுதியிட்டுத் தங்கள் முடிவுகளை அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டனர். போதுமான அளவு சிங்களத் தேர்ச்சிபெற்றவர்கள் இவ்விரு மாகாண அலுவலகங்களிலும் இல்லாததனலேயே இம் முடிவை அரசாங்க அதிபர்கள் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பகிஷ்கரிப்பு இயக்கத்தால், அங்கு செல்லும் சிங்கள ஊழியர்களுக்கு ஊண், உறைவிடம் மற்றுமுண்டான வசதிகள் கிடைப்பது கஷ்டமாக விருப்பதனல், அங்கு செல்ல சிங்கள ஊழியர்கள் மறுக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க தொண்டர்கள் என்ற பெயரில் சிங்கள ஊழியர்களை, சிங்களத் திணிப்புக்காக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்க அரசாங்கம் முயலுகிறது. அவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கவும் அரசாங்கம் தயாராம்.

இத்தகைய சூழ்நிலையில் தொண்டர்கள் என்ற பெயரில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று, தீவிர சிங்கள அமுலுக்கு ஒத்தாசை புரியக் கூடியவர்கள் நிச்சயமாக தீவிர வகுப்புவாதிகளாகவே இருப்பார்கள் என்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

பகிஷ்கரிப்பு இயக்கம் இன்னும் தீவிரமடைந்தால் இத்தகைய தொண்டர்களும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தலை காட்ட முடியாத சூழ்நிலை உருவாகும் என்றும், அதனுல் சிங்கள அமுல் ஸ்தம்பித்துவிடுமென்றும் கருதப்படுகிறது. பகிஷ்கரிப்பு இயக்கத்தின் காரணமாகவேதான் சிங்கள அரசாங்க ஊழியர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல மறுக்கின்றனர் என்ற விஷயம் அம்பலமாகியுள்ளது.

### தமிழகத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புளக்' உள்ளிட்ட அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும், வெளிநடப்பு செய்தனர்.

ஈ வெ. ரா பெரியார் சட்டத்தை எரித்த போது இல்லாத நடவடிக்கை, சம்பத் சட்டத்தை எரித்த போது இல்லாத பொலீஸ் நடவடிக்கை, தி. மு. கழகம் சட்டத்தை எரிக்க முனைந்த போது மட்டும் ஏன் என்று மக்கள் கேட்கின்றனர். தி. மு. கழகத்தின் மீது மட்டும் சென்னை அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறதென்றும், அடுத்த தேர்தலில் எங்கே தி. மு. க. ஆட்சிக்கு வந்துவிடுமோ என்ற பயத்தால், கழகத்தை நசுக்கப் பார்க்கிறதென்றும் மக்கள் நினைக்கிறார்கள்.

#### 'மெயில்' கண்டனம்

சென்னையில் வெளியாகும் ஆங்கிலத் தினசரி 'மெயில்' ஏடு, சென்னை சர்க்காரின் பாரபட்சமான — தி. மு. க. வை நசுக்கும் — நடவடிக்கையை ஆணித்தரமாகக் கண்டித்து தலையங்கம் தீட்டியுள்ளது. "காங்கிரஸ் அரசாங்கம் எவ்வளவு தூரம் அடக்குமுறைகளைக் கையாளுகிறதோ, அவ்வளவு தூரம் கழகத்துக்கு ஆதரவு வளரும்" என்று எழுதியுள்ளது.

#### அடுத்த போராட்டம்

இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் அடுத்த கட்டமான மறியல் போராட்டம், டிசம்சர் மாதத்தில் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை தடைச் சட்டத்தை மீறவேண்டாமென்றும், சட்ட எரிப்புப் போரில் ஈடுபட வேண்டாமென்றும் தி. மு. க. தலைமை நிலையம் உத்தரவிட்டுள்ளது.

### பதுளையில் முத்தமிழ் விழா

பதுளையில் உர்சுலாய் கன்னியர் மடத்தில் முத்தமிழ் விழா திரு. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தமிழ் வணக்கம் மிகவும் சிறப்பாக இருந்தது. நிகழ்ச்சிகளுக்கிடையில் பாரதியின் பாடல்கள் இடம் பெற்றன. இலங்கை பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. சண்முகதாஸ் பாரதியின் முப்பாடல்கள் என்ற தலையங்கத்தின் கீழ் ஓர் சொற்பொழிவு ஆற்றினார்.

வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீய ஆசிரமங்கள் இயங்கிய முறை

## அகிம்சை சத்தியம் இவையே அடிப்படை

## அறப்போர் வீரர்கள் உருவாக அடிகோலும் அமைப்பு முறை

**அகிம்சையையும், சத்தியத்தையும் ஆயுதமாகக் கொண்டு பஞ்சமா பாதகங்களையும் அகற்றி தூய்மை நெறியுடன் அறப்போர வீரர்களை உருவாக்கவே காந்தி அடிகள் ஆசிரமங்களைத் தோற்றுவித்து தொண்டர்களைத் தயாரித்தார். இலங்கைத் தமிழ் பேசும் மக்களும் உரிமைப்போரில் தங்களை அர்ப்பணிக்க காந்தி அண்ணலின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது தான் சிறந்த மார்க்கமாகக் கொள்ளப்படுகிறது.**

**காந்திய ஆசிரமங்கள் எத்தன்மையாக இயங்கினஎன்பதனை இக்கட்டுரை ஓரளவு தெளிவாகக் கூறுகிறது. 'மெய்ம்மை சேரில்லம்' என்று இங்கும் உருவாக விருக்கும் ஆசிரமமும் காந்திய முறையில் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கு இக்கட்டுரை உதவுமென நம்புகிறோம்.**

காந்திஜியைப் பல மாகாணங்கள் சொந்தம் கொண்டாடின. சுவாமி சிரத்தானந்த் அவர் ஹார்ட்வாரில் குடியிருக்க வேண்டுமென்று விரும்பினர். கல்கத்தாவிலுள்ள அவரது நண்பர்கள் வைத்தியானந்தத்திலிருக்கும்படி வலியுறுத்தினர். ராஜ்காட் அவரை வேண்டியது. அகமதபாத்தில் தங்கும்படி சில நண்பர்கள் கேட்டுக் கொண்டதுடன், அவருக்குப் பல வகைகளிலும் ஒத்தாசை செய்யவும் வாக்குறுதியளித்தனர். அவர் ஓர் குஜராத்தியானபடியினால், அவரது தேர்வு, குஜராத்தின் நாடித்துடிப்பாகிய இடத்திலேயே விழுந்தது.

அவருடைய வேலைகளுக்கு அகமதபாத் பல விதங்களிலும் சௌகரியமானதாக அமைந்திருந்தது. மக்களைத் தனது தாய்மொழியாகிய குஜராத்தி மூலம் கவரலாம் என அவர் எண்ணினர். இன்னுமோர் முக்கிய காரணம், முன் வந்து உவந்தளிக்கப்பட்ட நிதியுதவியாகும். அகமதபாத்தே குஜராத்தின் செல்வம் மிகுந்த வியாபாரத் தலமாக விளங்கியபடியால், அதன் பணக்காரப் பிரஜைகளைத் தமது புதிய நடவடிக்கைக்கு உதவி புரிய ஊக்குவிக்கலாமெனவும் காந்தி எண்ணினர்.

தமது திட்டங்கள், கொள்கைகள் பற்றி தெளிவில்லாதிருக்க காந்தி விரும்பவில்லை. தொண்டர்களைப் பயிற்றுவிக்க, தென்னாபிரிக்காவிலுள்ளது போன்று, ஓர் நிலையத்தை நிறுவத் தீர்மானித்தார். ஓர் பாரிஸ்டர் நண்பர், ஜீவன்லால் தேசாய், கச்ராபிலுள்ள தமது ஒற்றை மாடி பங்களாவை அளிக்க முன் வந்தார். காந்திஜியும் அதைப் பெற்றுக் கொண்டார்.

### 'சத்தியாக்கிரக ஆசிரமம்'

மே 25, 1915ல் கச்ராபில் ஓர் ஆசிரமம் நிறுவப்பட்டது. காந்தியின் நண்பர்கள், 'சேவாசிரமம்', 'தபோவனம்' என்று பல பெயர்களை அதற்குச் சூட்டுவதற்காக யோசனை கூறினர். தமது இலட்சியத்தையும், சேவை முறையையும் தெளிவாக்குவதாக அதனை 'சத்தியாக்கிரக ஆசிரமம்' என்று அழைக்க காந்திஜி தீர்மானித்தார். "எங்கள் இலட்சியம் உண்மைக்கு பக்தி செலுத்துவதாகும்; உண்மையை நிலைநாட்டுவதே எங்கள் தொழிலாகும்."

எல்லாமாக ஆசிரமத்தில் இருபத்தைந்து பேர் இருந்னர். அவற்றுள் பதின்மூன்று பேர் தமிழராகும்; மற்றவர்கள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாகும். என்றும், எப்பொழுதும் சுதந்திரத்துக்காக முதல் வேட்டு வைப்பதில் முன்னுக்கு நின்ற இனத்தைச் சேர்ந்தவர் தமிழர் என்பது இதனின்றும் தெளிவாகிறது.

### ஒரு குடும்பம்

ஆசிரமத்தில் உள்ளவர்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர். ஒரு சமையலறையிலேயே அனைவரும் உணவருந்தினர். ஆசிரமத்தின் நோக்கம், தாய் நாட்டின் சேவை. அதற்காக, அங்குள்ளோர் உண்மை, அகிம்சை, பிரம்மச்சரியம், களவாடாமை ஆதியன போன்றவற்றை நிலைநாட்டும் சத்தியப் பிரமாணங்கள் எடுக்க வேண்டியிருந்தது. அந்தச் சத்தியப் பிரமாணங்களைக் காந்திஜி பின்வருமாறு விளக்கினர்.

### பிரமாணங்கள்

உண்மை அல்லது சத்தியம் பற்றிய சத்தியப் பிரமாணம்:

பொய் பேசாதோ அல்லது பொய்மையை நாடாதோ விட்டால் மட்டும் போதாது. நாட்டுக்கு நன்மை தருவதாக இருந்தாலும், எமது பெற்றோரதோ அல்லது பெரியோரதோ எதிர்ப்பைப் பெற்றுவிடுமென்பதற்காகவோ, எந்த இம்மியளவு பொய்மையிலும் ஈடுபடக் கூடாது. இதற்கு, பிரகலாதனுடைய உதாரணத்தை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அகிம்சை பற்றிய சத்தியப் பிரமாணம்: உயிருள்ள பிராணியின் உயிரை எடுக்காது விடுவது மட்டும் போதாது. இந்தச் சத்தியப் பிரமாணத்தை எடுப்பவர், அநீதி இழைப்பவர் எனத்தான்கருதுபவரையும் தீங்கு செய்யமாட்டார்; அவர்கள் மீது கோபப்படார்; அவர்கள் மீது அவர் அன்பு கொள்ள வேண்டும். இவ்விதம் அவர் தமது பெற்றோர், அரசாங்கம் அல்லது வேறு எவருடையதும் கொடுமையை எதிர்ப்பாரேயன்றி, கொடுமை இழைப்பவரை எதிர்க்க மாட்டார். சத்தியத்தையும், அகிம்சையையும் பின்பற்றுபவன், கொடுங்கோலனையும் அன்பினாலேயே வெல்லுவான். கொடுங்கோலனின் கட்டளையை ஏற்கமாட்டான்; ஆனால், அவனுடைய கட்டளையை மீற உயிர் பிரியுமளவுக்குக்கூடத் தண்டனை பொறுப்பான்.

பிரம்மச்சரியம் பற்றிய சத்தியப் பிரமாணம்: பிரம்மச்சரியம் அனுஷ்டிக்காதவர்களால், மேற்கூறிய இரு சத்தியப் பிரமாணங்களையும் அனுசரிப்பது மிகவும் கஷ்டமாகும். இந்தச் சத்தியப் பிரமாணத்தை அனுஷ்டிக்கும் பொழுது, ஒரு பெண்ணைக் காமக் கண்ணோடு பார்க்காமல் விட்டு விட்டால் மட்டும் போதாது. அவன் தனது மிருக இச்சைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், அவை எண்ணத்தில் கூட உதிக்கக் கூடாது. அவன் திருமணமானவனென்றால், தனது மனைவியைப் பற்றி இச்சை பூர்வமான மனம் கொண்டிருக்காமல், அவளைத் தனது வாழ்க்கைத் துணையென்ற தோழமை முறையை பரிபூரண தூய்மையுடன் நிலைநாட்டுவான்.

உணவு விருப்பத்தைக் கட்டுப்படுத்தல்: தனது நாட்டுக்குச் சேவை செய்ய விரும்புவன், தனது உடலைப் பாதுகாத்துக்கொள்ள மட்டுமே உணவருந்துதல் என்றுணர்ந்து கொள்வான். ஆகவே, அவன் தனது உணவைக் கட்டுப்படுத்துவதுடன், தூய்மையானதாகவும் ஆக்கிக் கொள்வான்.

களவாடாமை பற்றிய சத்தியப் பிரமாணம்: மற்றவர்களுக்குச் சொந்தமானவற்றைக் களவாடாமல் விட்டு விட்டால் மட்டும் போதாது. எங்களுக்குத் தேவையில்லாத பொருள்களை நாம் வைத்திருத்தல் அல்லது உபயோகித்தலும் களவேயாகும்.

சொத்துரிமை கொண்டாடாமை பற்றிய சத்தியப் பிரமாணம்: அதிக பொருள்களை, சொத்துக்களை வைத்திருக்காமல் விட்டு விட்டால் மட்டும் போதாது. எமது உடற்தேவைகளுக்கு அத்தியாவசி

(13-ம் பக்கம் பார்க்க)

## சந்தியில்....

சிங்களம் புகுந்தாலும் புகுந்தது; அதனல் ஏற்படும் தொல்லைகளுக்கு முடிவேயில்லை. தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாமல் சிங்களவர்களுக்கே இந்தச் 'சிங்களம் மட்டும்' பெரிய தலைவேதனையை ஊட்டி வருகிறது.

தபால் இலாகாவில் லிகிதர் சேவைக்கு அண்மையில் சில காலி ஸ்தானங்களுக்கு நியமனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. நியமனக் கடிதங்கள் அனைத்தும் சிங்களத்திலேயே இருந்தன. இவற்றைப் பெற்றவர்கள் பெரும்பாலும் சிங்களவர்களே தான். குறிப்பிட்ட காலத்தில் இவர்களிற் பலர் கொள்ளுப்பிட்டியிலுள்ள 7 மாடிக் கட்டிடத்தில் உள்ள காசுக் கட்டளைப் பகுதியில் வேலைக் கமர்ந்தனர்.

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் பொறியியற் பகுதிக்குரிய காலி இடங்களை நிரப்ப, உரியவர்களுக்கு கட்டளைகள் அனுப்பப்பட்டும் எவரும் வேலைக்கு வரவில்லையே என்று மேலிடத்திற்குப் புகார் அனுப்பப்பட்டது. அதன் பின்னர்தான் விசாரணைகள் நடந்து உண்மை வெளியாகியது.

பொறியியற் பகுதிக்கு வரவேண்டிய லிகிதர்கள் அனைவரும் காசுக் கட்டளைப் பகுதியில் வேலை செய்து வருகிறார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களுடைய நியமனப் பத்திரங்களைப் படித்த சிங்கள மேலதிகாரிகளுக்கே அப்பத்திரத்திலிருந்தவாசகங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லைப் போலும்.

○

கொழும்புக்கு அண்மையாகவுள்ள ஒரு சலனப் படப்பிடிப்பகத்தில் ஒரு நடன ஆசிரியர் நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது திடீரெனப் பொலீசாரால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டாராம்.

இந்தியக் கதகளி, மணிப்புரி நடனங்களை சிங்களவர்களுடைய ரசிகத் தன்மைக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைத்து இலங்கையில் எண்ணற்ற நடனக்காரர்களைத் தயாரித்துள்ளார் மேற்படி கைது செய்யப்பட்ட நடனக் கலைஞர். சிங்களக் கலைஞர்கள் 'தங்கள் புராதனக் கலை' என்று கொண்டாடும் அளவுக்கு நடனக் கலைக்கு மெருகு கொடுத்த அந்தக் கலைஞரின் நிலை பாம்புக்குப் பால் வார்த்த கதையாகி முடிந்து விட்டதை இப்பொழுதாவது உணருவார் என்றே கருதுகிறோம்.

இந்த நடனக் கலைஞரின் திறமையைப் பயன்படுத்திக் கொண்டே ஒரு பிரபல பிரமுகர் வெளிநாடுகளுக்கெல்லாம் தமது சகபாடிகளை அழைத்துக் கொண்டு கலைத்தூது சென்றாராம். வெளிநாட்டு மேடைகளில் இலங்கை நடனக் கலை—இந்திய நடனக் கலையின் போலிப் பிரதி என்பது வெட்ட வெளிச்சமாகியதனல் ஏற்பட்ட கோபத்தினலேயும், வெளியே செல்ல முடியாத வெட்கக் கேடான செயல்களாலும் தான் இன்று கலைஞர் சிறையில் வாடவேண்டிய நன்றி கொன்ற செயல் ஏற்பட்டு விட்டதாம்.

—அம்மான்.

## யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர் தவிப்பு

### சிங்களத் தாதிகளால் ஏற்பட்டுள்ள சங்கடம்

**யாழ்ப்பாணம் அரசாங்கப் பெரிய மருத்துவமனையில் கடமையாற்றும் உயர் தாதிமார்கள், சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடாத்த வந்தவர்களா என்ற கேள்வி இன்று யாழ் நகரில் பரவலாக எழுந்துள்ளதாம். இவர்கள் தங்கள் கடமையிலும் பார்க்க, சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடாத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறார்களாம்.**

தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கடமையாற்றும் இவர்கள், வைத்தியத்திற்கு வரும் நோயாளர்களுடன் சிங்களத்திலேயே கதைத்து வருகிறார்களாம். நோயாளர்கள் தமிழ்மொழியில் கதைத்தால், அவர்கள் மீது சீறி விழுகிறார்களாம், இந்தத் தாதிமார்.

வெளி நோயாளர்களைப் பொறுத்தவரையில் இவர்களுடைய துன்புறுத்தலுக்கு [illegible] றும், உள்நோயாளர்களாக இருப்பவர்களே பெரிதும் இன்னலுக்கு இலக்காகிறார்கள் என்றும் தெரியவருகிறது. இந்த சிங்களத் தாதிமார்களின் செயலினல், உள்நோயாளர்களாக அனுமதிக்கப்படுகிறவர்கள், நோய் குணமாவதற்குப் பதிலாக மேலும் புதிய சில நோய்களையும் பெற்றுத் திரும்ப வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

உள்நோயாளராக இருந்த ஒருவர் நமது நிருபரிடம் கூறுகையில், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 'சிங்களம் மட்டும் டோஸ்' நிறையக் கிடைப்பதாக, மிகுந்த வேதனையுடனும் கடுகடுப்புடனும் கூறினர்.





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதிகள் கைது: ராணுவப் போர் நிறுத்தம்

*** பாப்பரசரின் முயற்சி தோல்வி * உள்நாட்டுப் போர் வாபஸ் * அரசாங்கத் தலைவனின் சதி * ஆள் தூக்கிச் சட்டம்! அமுல் * தளபதி வீர மரணம் * தேர்தல் ஆரம்பம்**

டின் வட பகுதியிலுள்ள குடியரசு இராணுவப் பிரிவின் தளபதிதான் எய்க்கன்.

இராணுவ ரீதியில் இனிமேல் தமக்குத் தோல்வி தான் நிச்சயம் என்று குடியரசு இராணுவத்தின் வாரியம் தீர்மானித்தது. அதனால்

கொஸ்கிரேவுடன் தொடர்பு கொண்டார். எனினும் கொஸ்கிரேவ் எவ்வித சமரசத்தையும் விரும்பவில்லை. குடியரசுவாதிகள் தமது ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பாராளு

அனைவரும் எதிர்பார்த்ததுபோல் பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது. தேர்தல்கள் 27-8-1923ல் நடைபெறவிருந்தன. புதிய பாராளுமன்றத்துக்குப் புதிய தொகுதிகளும் உருவாக்கப்பட்டிருந்தன. இவையனைத்தும் கொஸ்கிரேவ்

# தேர்தல் களத்தில் தலைவர் டி வேலரா

## அரங்கம் 25

பாப்பரசரின் தூதுவர் அயர்நாட்டில் இருக்கையில் அயர் குடியரசு இராணுவத்தின் வாரியம் கூடியது. தீவின் தெற்குப்புறத்திலுள்ள மலைகள் மத்தியில் ஒருகுடிசையில் 24-3-1923ல் கூடிய கூட்டத்தில் ஏமன் டி வேலரா உட்பட 10 தளபதிகளே பிரசன்னமாயிருந்தனர். உள்நாட்டு யுத்தத்தின் கெடுபிடி காரணமாக ஏனையோர் சமூகம் கொடுக்க முடியவில்லை. சமாதான முறையில் பேச்சுவார்த்தைகள் நடாத்துவது பற்றித் தளபதிகள் ஆராய்ந்தனர். எனினும் எவ்வித பாரதூரமான முடிவும் செய்யப்படவில்லை. இராணுவ வாரியத்தின் அடுத்த கூட்டம் நடைபெறும் வரையுமுள்ள இடைக்காலத்தில் சமாதானத்திற்கான எல்லாப் பொறுப்புக்களும் ஏமன் டி வேலராவிடம் விடப்பட்டது:

குடியரசுதிபதி டி வேலரா சமரசம் ஏற்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தார். இன்னும் சில குடியரசுவாதிகளுடன் பாப்பரசரின் தூதுவரான மொன்சீஞோர் லூசியோவைச் சந்தித்தார். தூதுவர் மிகவும் கரிசனையுடன் டி வேலரா கூறியவற்றைக் கேட்டுத் தம்மாலானவற்றைச் செய்வதாக உறுதிமொழி கூறினார். எனினும் மொன்சிஞோர் லூசியோ அரசாங்க வாரியத்தின் தலைவரான கொஸ்கிரேவைச் சந்திக்கச் சென்றபோது, கொஸ்கிரேவ் அரசியல் சம்பந்தமாக ஏதும் பேச மறுத்து விட்டார். அதனால் பாப்பரசரின் சமரச முயற்சி தோல்வியையே கண்டது.

பாடையருகில் கூடிக்கவலைகொள்ளும் இவ்வேளையிலே, எந்தக் குறிக்கோளுக்காக அவர் தனது இளம் உயிரைப் பலிகொடுத்தாரோ அந்தக் குறிக்கோளுக்காக உங்களை அர்ப்பணிப்பதாக நீவிர் ஒவ்வொருவரும் சூளுரைப்பீர்; மரணம் வரை அதற்கு விசுவாசமாக இருப்பதற்கான மனவலிமையைத் தரும்படி விடுதலை, சத்தியம் ஆகிய இவற்றிற்கு இறைவனை உள்ளவரை வேண்டிக் கொள்வீர்.

"உங்களை விட்டுப் பிரிந்து போயுள்ள முன்னாள் தோழர்களே ஆயுதங்களுடன் உங்களை எதிர்த்து வருவதினால் உங்கள் பணி கடினமானது மட்டுமல்ல, கவலையானதும் கூட. அவ்வாறான பணியைப் புரிய முன்வரும் வீராதி வீரர்கள்தான், ஓர் இனத்தை நசுக்கி நாசமாக்கும் போக்கைத் தடைசெய்து நிறுத்தக்கூடியவர்கள், நிறுத்த வேண்டியவர்கள்.

"அடிமை ஒருவனைப் போல் வாழாது, உங்கள் நாயகன் மாண்டது போல் மானத்தோடு மாள்வது மேலானது.

"உங்கள் குறிக்கோள் அழிவற்றது. பலியைக் கோரும் போராட்டம் ஒன்றினால் ஏற்படும்

30-4-1923 நண்பகல் தொடக்கம் உள்நாட்டு யுத்தத்தை நிறுத்துவதெனவும் கொஸ்கிரேவின் அரசாங்கத்துடன் ஒரு சமரசத்திற்கு வருவதெனவும் வாரியம் முடிவு செய்தது. இந்த முடிவுக்கு இணங்க எல்லாக் குடியரசுவாதிகளும் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனக் குடியதிபதி ஏமன் டி வேலரா குடியரசு அரசாங்கத்தின் சார்பிலும்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

தண்டநாயகன் பிராங் எய்க்கன் குடியரசு இராணுவத்தின் சார்பிலும் கையொப்பமிட்டுப் பிரகடனமொன்றை வெளியிட்டனர்.

1916ம் ஆண்டு ஈஸ்டர் வாரப் புரட்சி இராணுவ ரீதியில் தோல்வியைக் கொடுத்த பின் தலைவர்கள் அனைவரும் சரணுகதியடைந்தது அனைவரும் அறிந்ததே. போலண்ட் போறணையில் தொண்டர்களை முன்னின்று நடாத்திய தளபதி ஏமன்

மன்ற உறுப்பினர்கள், தாம் ஆங்கில மன்னருக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்தே தீர வேண்டும் எனவும் கொஸ்கிரேவ் நிபந்தனைகள் விதித்துக் கொண்டிருந்தார். எவ்வித சமரசமும் ஏற்படுவதற்கு முன்னர் குழப்பமான இந்நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுக் குழப்பத்துக்குக் காரணம் குடியரசுவாதிகளே என்று பிரசாரம் செய்து தேர்தலில் அமோக வெற்றி பெற வேண்டும் என்பதே கொஸ்கிரேவின் அந்தரங்க நோக்கமாக இருந்தது. அதனால் டி வேலராவின் சமரச முயற்சியும் தோல்வியையே கண்டது.

குடியரசு மந்திரிசபையும் அயர் குடியரசு இராணுவத்தின் வாரியமும் 13-5-1923ல் மீண்டும் கூடியது. உள்நாட்டு யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பதில்லையெனவும் மக்களுக்கான சமூக சேவையில் குடியரசுவாதிகள் ஈடுபட வேண்டுமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுகாலவரையும் 1916ம் ஆண்டில் பிரகட

கட்சிக்குச் சாதகமாகவே அமைக்கப்பட்டிருந்தன; புதிய பாராளுமன்றத்தில் 153 ஆசனங்கள் இருந்தன.

87 குடியரசுவாதிகள் டி வேலராவின் தலைமையிலிருந்த சின் பீன் இயக்கத்தின் சார்பில் போட்டியிட முன் வந்தனர். வழக்கம் போல் ஏமன் டி வேலரா, கிளயா தொகுதிக்கு நியமிக்கப்பட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக அரசாங்கக் கட்சியால் பேராசிரியர் ஐன் மக்னீல் நிறுத்தப்பட்டார்.

தேர்தல் பிரசாரம் செய்வது சின் பீனைப் பொறுத்த மட்டில் மிகவும் கடினமாக இருந்தது. சின் பீன் வேட்பாளர்களில் பலர் சிறைகளிலிருந்தனர். ஏனையோர் எந்நேரமும் கைதுசெய்யப்படக் கூடியவர்கள். தேர்தல் கிட்டிக் கொண்டு வர்வர, சின் பீனின் இன்னல்களும் அதிகரித்துக் கொண்டே வந்தன. இராணுவத்தினரும் பொலீசாரும் சின் பீன் தேர்தல் அலுவலகங்களைச் சோதனை செய்து பலரைக் கைது செய்த வண்ணமிருந்தனர்; சின் பீனின் தேர்தல் பிரசுரங்களை அபகரித்துச் சென்றனர்; சின் பீன் தேர்தல் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தவர்களையும் அக் கூட்டங்களில் பேசியவர்களையும் நையப்புடைத்தனர். வயது வந்தவர்கள் கைது செய்யப்படுவதைக் கண்ட சிறுவர்களும் சிறுமியர்களும் தேர்தல் பொறுப்பைத் தாமே மேற்கொண்டனர். ஆயினும் இந்தச் சிறுவர்களும் சிறுமியர்களும் கூட அரசாங்கத்தின் படைகளிடமிருந்து தப்ப முடியவில்லை. சின் பீன் தேர்தல் கூட்டங்களில், துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு, கூடியிருந்த மக்கள் கலைக்கப்பட்டனர். இவ்வாறான இக்கட்டுகளையும் பொருட்படுத்தாது குடியரசுவாதிகள் தேர்தல் பிரசாரத்தில் குதித்துத் தம் கடமையைச் செய்தனர்.

தலைவர் ஏமன் டி வேலரா 15-8-1923ல் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசப் போவதாக அறிவிக்கப்பட்டது. நெடுங்காலத்திற்குப் பிறகு தமது ஒப்பற்ற தலைவர் பேசப் போவதைக் கேட்பதற்காக, எள் போட்டால் எண்ணெய் எனும் வண்ணம் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினர். மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் ஒவ்வொரு தெரு மூலையிலும் இராணுவத்தினரும் பொலீசாரும் உளவுப் பொலீசாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். டி வேலரா கூட்டத்திற்கு வரு முன்னரே கைது செய்யப்பட்டுவிடுவார் எனப் பலர் நம்பினர். ஆனால் கூட்டம் ஆரம்பிக்கும் நேரம் வந்தது. தலைவர் ஏமன் டி வேலராவும் சடுதியாக மேடையில் தோன்றி மக்களுக்கு வணக்கம் கூறினார். தம் ஒப்புயர்வற்ற தலைவனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி மேலீட்டினால் ஆரவாரிக்கத் தொடங்கினர்.

(வளரும்)




சமரசத்திற்காக முயற்சிகள் கையாளப்பட்டு வந்த வேளையில் அயர் குடியரசு இராணுவம் பல விதமான தோல்விகளைக் கண்டு கொண்டே வந்தது. இராணுவத்தின் தானைபதி ஆட்சியினரால் கைது செய்யப்பட்டார். இவர் தப்பியோட முயற்சி செய்தபோது சுடுபட்டுக் காயமடைந்தார். 10-4-1923ல் இராணுவத்தின் தண்டநாயகன் லயம் லிஞ்ச் ஆட்சியினரின் படையினரால் சுடப்பட்டு மாண்டார். தேசபக்தர்கள் பரம்பரையில் உதித்த லயம் லிஞ்ச் மரணமடையும் போது அவருக்கு வயது 32 தான். பல வீரதீரச் செயல்களைப் புரிந்த இந்தச் சிங்கஏறின் மரணம் குறித்துக் குடியதிபதி ஏமன் டி வேலரா குடியரசு இராணுவத்தினருக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பினார்:

"குடியரசின் படைஞர்களே, நாட்டு மக்களின் மானத்தையும் சுதந்திரத்தையும் காக்கும் அரண் போன்றவர்களே, மாண்புமிக்க ஓர் உயிரும் மன உறுதியும் கொண்டவரான உங்கள் தோழன், நம்பிக்கை மிக்க நண்பர்களான மலைகளின் துணையுடன் ஒரு பேரரசின் படைகளையே மடக்கி, அவர்களை வழிக்குவரச் செய்த சிங்க இதயம் படைத்த உங்கள் நாயகன் மறைந்தது குறித்து அவரது

இழப்பு, தவறான போதனைகள், தற்காலிகத் தோல்விகள், நட்டங்கள் ஆகிய இவை இறுதி வெற்றியைத் தள்ளிப் போடலாம்; ஆனால் அதை அறவே தடுத்து நிறுத்த முடியாது. அறியாமையால் இன்று உங்களை நிந்திப்பவர்கள், நீங்கள் செய்யும் தியாகத்தின் காரணமாக, நாளை உங்களை மதித்துப் போற்றுவார்கள் என்பது நிச்சயம்.

"எமட்டின் கல்லறையிலே வார்த்தைகள் பொறிக்கப்படும் காலத்திலே, நாம் அன்புடன் நேசிக்கும் அவரது பெயருடன், அயர்நாடு தன்னைத் தானே ஏமாற்றுது இருப்பதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த தேசபக்தர்களின் பெயர்களும் இடம் பெற்றே தீரும்."

தண்டநாயகன் லயம் லிஞ்ச் மரணமடைந்த நாலாம் நாள் தளபதி ஒஸ்டின் ஸ்ரக் கைதுசெய்யப்பட்டார். இத்துடன் கைது செய்யும் படலம் முடிவடையவில்லை. தீவின் தென் புறத்திலுள்ள மலைகளில் ஆட்சியினர் பலத்த தேடுதல் நடாத்தினர். அதன் காரணமாகக் கொரில்லாப் போரை முன்னின்று நடாத்திவந்த தளபதிகளிற் பலர் கைதாகினர். இந்த நிலையில் இராணுவத்தின் வாரியம் 20-4-1923ல் மீண்டும் கூடியது. [illegible] யாகவிருந்த தண்டநாயகன் பதவிக்கு பிராங் எய்க்கன் நியமிக்கப்பட்டார். அயர்நாட்

டி வேலரா ஏப்பிரில் 30ம் திகதி சரணாகதியடைந்தார். ஏழு ஆண்டுகளுக்குப் பின் அதே ஏப்பிரில் 30ம் திகதியன்று குடியரசைக் காப்பாற்றுவதற்காக நடாத்திய உள்நாட்டு யுத்தத்தைக் குடியதிபதி ஏமன் டி வேலராவின் கீழுள்ள குடியரசுவாதிகள் நிறுத்தி வைத்தனர். அன்றோடு குடியரசுக்காக ஆயுதம் ஏந்தும் கொள்கையும் கப்பலேறியது என்றால் மிகையாகாது.

## அரங்கம் 26

அயர் குடியரசு இராணுவம் உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தியது பற்றி எவ்வித செய்தியையும் தினசரிப் பத்திரிகைகள் பிரசுரிக்க மறுத்தன. அரசாங்கமும் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அரசாங்கமோ குடியரசுவாதிகளைக் கைது செய்து கொண்டும் கொலை செய்து கொண்டும் இருந்தது.

சமரசப் பேச்சுவார்த்தைகள் பற்றி ஆராய்ந்துகொண்டிருந்த ஏமன் டி வேலரா அரசாங்கத்தின் தலைவரான கொஸ்கிரேவுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தார். ஆனால் கொஸ்கிரேவ் [illegible] அதனால் மூன்றும் கட்சியினர் மூலம் டி வேலரா,

னப்படுத்திய குடியரசைப் பாதுகாப்பதிலும் நாட்டு மக்களின் மானத்தைக் காப்பதிலும் முன்னின்ற அயர் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த படைஞர்களுக்கு நன்றி தெரிவித்துக் குடியதிபதி டி வேலரா அறிக்கையொன்றை வெளியிட்டார். காலம் வரும்போது மீண்டும் மக்கள் குடியரசொன்றை அமைக்க முன் வருவார்கள் என அந்த அறிக்கையில் டி வேலரா கூறியிருந்தார்.

குடியரசுவாதிகளின் இந்த விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைப் பற்றிச் சிறிதளவும் சிந்திக்கக் கொஸ்கிரேவ் தயாராக இருக்கவில்லை. அவர் பாராளுமன்றத்தில் புதிய ஒரு மசோதாவைக்கொண்டு வந்தார். விசாரணையின்றி எதிர்க்கட்சியினரைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைப்பதற்கான பொதுசனப் பாதுகாப்பு மசோதாதான் அது. தொழிற் கட்சியினர் அதை எதிர்த்து வாக்களித்தனர். குடியரசுவாதிகளும் பாராளுமன்றத்திலிருந்து எதிர்த்து வாக்களித்திருந்தால் அந்த மசோதா நிச்சயமாகத் தோல்வியடைந்திருக்கும். ஆனால் அவர்களுடைய பிரசன்னத்திற்கு தந்துபோல் தடையாக இருக்கின்றதே சத்தியம் செய்ய வேண்டிய நிபந்தனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 நவம்பர் மாதம் 24-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# அதிர்ச்சியூட்ட வேண்டும்!

"திருமலை இடைத் தேர்தல் முடிவு ஆட்சியாளருக்கு அதிர்ச்சியூட்ட வேண்டும்" இவ்வாறு வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திருகோணமலைத் தேர்தல் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

திருமலைத் தேர்தலிலே தமிழரசுக் கட்சிக்கு வெற்றி நிச்சயம் என்று அறுதியிட்டுக் கூறுகின்றன திருமலைச் செய்திகள்.

வெற்றி மட்டும் போதுமா? அன்று—கடந்த பொதுத் தேர்தலில்—அது போதுமானதாயிருந்தது. இன்று நிச்சயம்போதாது. ஏன்? ஆபத்து அன்றுவந்து கொண்டிருந்தது. இன்றோ வந்துவிட்டது. தனிச் சிங்களம் தமிழ் பேசும் இனத்தின் மென்னியைப் பிடிக்க இன்னும் 38 நாட்களே உள்ளன. அந்தப் பேரபாயத்தை எதிர்த்து முறியடிக்க மக்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளனர்.

திருமலை வாக்காளர் அதிர்ச்சியூட்டும் தீர்ப்பை வழங்கினாலன்றி, ஆட்சியாளர் இத் திடசங்கற்பத்தை அறிந்து கொள்ள முடியாது.

திருமலையில் தமிழரசாரின் அமோக வெற்றியைக் கண்டு ஆட்சியாளர் அதிர்ச்சியடைய வேண்டும். சிங்கள வகுப்புவாதிகள் வெட்கித் தலைகுனிய வேண்டும். ஐ. நா. சபையும் பிற நாடுகளும் தமிழ் பேசும் மக்களிடம் கட்சிக்குள்ள பேராதரவைக் கண்டு வியப்படைய வேண்டும்.

அந்த அளவுக்கு இந்தத் தேர்தலில் கட்சியின் வெற்றி மகத்தானதாயிருக்கட்டும்!

திருமலையிலே கட்சிக் கொடி கடந்த பத்தாண்டுகளாகத் தொடர்ந்து பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. அதனைத் தாழவிடாது இன்னும் ஓரடி உயர்த்திப் பிடிப்பது திருமலை வாக்காளரின் கடமை.

திருமலை மக்களுக்குப் பல கோரிக்கைகளும் குறைபாடுகளும் உண்டு. அவற்றை நிவர்த்திசெய்ய அவர்கள் கையிலுள்ள ஒரே ஆயுதம் தமிழரசுக் கட்சியே. அந்த ஆயுதத்தை எறிந்துவிட்டால், உரிமைகளோடு சேர்த்து நாடும் பறிபோய், அடிமைகளாகவே வாழ நேரிடும்.

(1) இயற்கை வசதிகள் நிறைந்த, ஈடுயிணையற்றது நமது திருமலைத் துறைமுகம். இது சிங்கள ஆக்கிரமிப்புக்குப் பலியானால், வட, கீழ்ப் பிரதேசங்கள் துண்டிக்கப்பட்டுவிடும். தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பெரும் நஷ்டம் ஏற்படும். எனவே நமது துறைமுகத்தை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

(2) திருமலையை அபகரிக்கப் படிப்படியாக முன்னேறுகின்றனர் சிங்களவர்கள். அவர்களின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்தினாலன்றித் திருமலையைப் பாதுகாக்க முடியாது.

(3) புராணச் சிறப்புப் பெற்ற திருமலை, தமிழ் மக்களின் புண்ணிய பூமி. வரலாற்றுப் பெருமை வாய்ந்த கோணேஸ்வராலயம் என்றென்றும் தமிழர் கையிலேயே இருத்தல் வேண்டும். தமிழரசுக்கட்சி ஒன்றே அப்பணியை நிறைவேற்ற முடியும்.

(4) இத்தேர்தலில் தமிழ், முஸ்லிம் வாக்குகள் பிளவுபட்டால் சிங்கள வேட்பாளர் வெற்றி பெற வாய்ப்பு ஏற்படலாம். பின்னர் திருமலையைச் சிங்களவர்கள் பிடியிலிருந்து மீட்பதே கடினமாகிவிடும். இந்த நிலை நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றத் திருமலை மக்களுக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. இத் தேர்தலில் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஏகோபித்து தமிழரசு வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதே அந்த வழி.

தனிச் சிங்களத்தை முழுமூச்சுடன் திணிக்கவிருக்கும் நெருக்கடியான வேளை இது. இத்திணிப்புக்குத் தமிழ் பேசும் இனம் அளிக்கும் பதில் திருமலை வாக்காளர் வாயிலாக அளிக்கப்படவேண்டும். தமிழரசு வேட்பாளரைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்வதே அந்தப்பதில்.

அன்று போல் இன்றும் திருமலை தமிழரசாரின் கோட்டை என்பதைத் திருமலை வாக்காளரின் தீர்ப்பு எடுத்துக்காட்ட வேண்டும். ஆம், அத்தீர்ப்பு ஆட்சியாளருக்கு அதிர்ச்சியூட்டக்கூடியதாகவே இருக்கட்டும்!

# சீர்செய்ய முன்வருக!

அடுத்த வார இறுதியில் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

கடந்த சில காலமாக யாழ் நகர சபை நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்தன. நகர மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. சுய நலமிகள் சொந்த நலன்களுக்காகச்சபையைப் பயன்படுத்திக் கொட்டமடித்தனர். மேயர்கள் அடிக்கடி மாறினர். நகர சபைக் கூட்டங்கள் சில போர்க்களமாகக் காட்சியளித்தன.

சுருங்கக் கூறின், யாழ் மாநகர சபை நகர மக்களின் நம்பிக்கையை இழந்ததோடு, கெட்ட பெயரையும் தேடிக் கொண்டது.

நகர மக்களின் பணம் சுயநல நோக்கங்களுக்காக விரயமாக்கப்பட்டது. நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்து நாற்றமெடுக்கத் தொடங்கிவிட்டன. வட இலங்கையின் தலை நகரம் இக் கதிக்குள்ளானது தமிழ் பேசும் இனத்துக்கே பெரிய அவமானம்.

# யாழ். நகர சபை சீர் பெற வழி

# வாக்காளர் கையில் தானுண்டு

யாழ் நகருக்கு நிலையான, நிர்வாகச் சீர்பெற்ற நிரந்தரமான ஊழல்களற்ற ஓர் ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டியது வாக்காளப் பெருமக்களின் தலையாய கடமை. தமிழரசுக் கட்சி தனது வேட்பாளர்களையும், ஆதரவாளர்களையும் இம் முறை மாநகர சபைத் தேர்தலுக்கு நிறுத்தியுள்ளது. அவர்களை ஆதரித்து வெற்றி பெற வைக்க வேண்டியது தமிழ் பேசும் மக்களின் பொறுப்பு.

இவ்வாறு கொழும்பு தமிழரசுக் கட்சிக்கிளைச் செயலாளர் 'சுதந்திரன்' மூலம் அறிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண நகர நிர்வாகத்துக்கு ஒரு நிலையான, சீரான, ஒழுங்கான ஆட்சியை அமைப்பதற்கு யாழ். நகர வாக்காளப் பெருமக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

யாழ்ப்பாண மாநகரசபை ஆட்சி பல காலமாகக் கற்றவரும் மற்றவரும் பார்த்து எள்ளி நகையாடும் அளவிற்குச் சீரழிந்த ஆட்சியாகக் காட்சி தந்து வருகிறது. இஃது அறிவுத் திறனுக்கும், ஆற்றல் வலிமைக்கும் புகழ் பெற்ற தமிழ் பேசும் இனத்துக்கு ஒரு துடைக்க முடியாத கறையென்பது மறைக்க முடியாத உண்மை. அதுவும் தமிழ் பேசும் இனம் சுதந்திரத்துக்காகவும்—விடுதலைக்காகவும் போராடி வரும் இவ்வேளையில், அவ்விதச் சுதந்திரத்துக்கும், விடுதலைக்கும் கொஞ்சமும் அருகதையற்றவர்கள் என்ற முறையிலும் — வகையிலும் செயல்படுவது துக்கப்பட வேண்டிய விஷயம் மட்டுமல்ல, வெட்கப்படவேண்டிய விஷயமுமாகும்.

நகரசபையின் சீர்கெட்ட ஆட்சிக்கு, வேளைக்கொரு கட்சி மாறி, நாளுக்கொரு மேயரைத் தெரிவுசெய்யும் வேதனைக்குக் காரணங்கள் எவையெவை என்பதத் தயவு செய்து இந்த நேரத்தில், வாக்குச் சாவடிக்குப் போகு முன், ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்துப் பார்த்துச் செயல்படுவதே வாக்காளரின் பொறுப்பு.

கொள்கை, குறிக்கோள், இலட்சியம் இவற்றைப் பாராது, வெறும் உதிரிகளையும், ஊரைக் கொள்ளையடித்து உலையில் போடும் சுயநலவாதிகளையும், கட்டுப்பாடற்ற கட்டாங்காலிகளையும், இனத்தை விற்று அதனால் தங்களது வாழ்வை வளமாக்கிக் கொள்ளும் துரோகிகளையும் நீங்கள் ஆதரிப்பதும்—ஆதரிக்க முற்படுவதுமே மாநகரசபை ஆட்சிச் சீர்கேட்டுக்கும்—அலங்கோலத்துக்கும் அடிப்படைக் காரணங்கள் என்பதைத் தயவு செய்து வாக்காளர்கள் உணரவேண்டும்.

இந்த இழிநிலை நீக்கப்பட வேண்டுமென்றால் மேற்குறிப்பிடப்பட்ட சுயநலக் கும்பல் தேர்தலில் தயவு தாட்சண்யமின்றித் தோற்கடிக்கப்பட வேண்டும்.

ஜாதி, மதம் பாராமல், ஊரவன்—அயலான் என்று பாராமல் வேட்பாளர்களது அரசியல் கொள்கையை — இலட்சியத்தை எடை போட்டு அவர்கள் சார்ந்திருக்கிற அரசியல் கட்சியின் வரலாற்றை மனதில் இருத்தி உங்கள் வாக்கை அளிப்பது அவசியம்.

நேர்மைக்கும், தொண்டுக்கும், தியாகத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும், கண்ணியத்திற்கும் பெயர் பெற்ற ஒரு அரசியல் கட்சியாலேயே மாநகரசபைக்கு ஒரு நீண்ட, நிலையான, ஊழலற்ற, திறமையான ஆட்சியை நல்க முடியும். அத்தகைய ஆட்சியை நல்குமுகமாகவே இ. த. அ. கட்சி தனது வேட்பாளர்களையும், ஆதரவாளர்களையும் தேர்தலில் நிறுத்தியுள்ளது.

தமிழ் அரசுக்கட்சி வேட்பாளர்களை ஆதரிப்பதன் மூலம் யாழ். நகரசபைக்குப் புது வாழ்வும், இனச் சுதந்திரத்துக்குப் புது எழுச்சியும் நல்குமாறு மீண்டும் பணிவோடு வேண்டுகிறோம்.

யாழ். நகரசபைத் தேர்தல் முடிவை அறிய தமிழ் பேசும் இனம் ஆவலுடன் காத்திருக்கிறது.

## வேட்பாளர் விபரம்

கீழ் குறிப்பிடப்பட்டவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப் பட்டுள்ளனர்.

### 1ம் வட்டாரம்

நியாயதுரந்தரரான திரு. ப. கதிரவேலு போட்டியிடுகிறார். முதன் முதலில் மாநகர சபைத் தேர்தலில் பிரவேசிக்கும் இவர் சிறந்த சமூக சேவகர்.

### 4ம் வட்டாரம்

முன்னாள் யாழ் நகர முதல்வரும் யாழ் எம். பியுமான திரு. அல்பிரட் துரையப்பாவுடன் நேரடியாக மோதுகிறார் திரு. த. சிவப்பிரகாசம். விவசாயத்திலீடுபட்டுள்ள இவர் தமிரசுக் கட்சிப் போராட்டங்களில் முன்னணியில் நின்றவர்.

### 5ம் வட்டாரம்

மாநகர சபை முதல்வராகச் சிறிதுகாலம் இருந்தாலும் யாவரும் வியக்கத்தக்க தொண்டாற்றிய டாக்டர் ச. அ. தருமலிங்கம் தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் முக்கியமானவர்.

### 6ம் வட்டாரம்

இவ்வட்டாரத்தில் நியாயதுரந்தரரும் தமிழரசுக் கட்சி உறுப்பினருமான திரு. சு. செ. மகாதேவா போட்டியிடுகிறார்.

### 9ம் வட்டாரம்

நல்லூர் தமிழரசுக் கட்சித் தலைவரான திரு. சி. மன்மதராயன் இவ்வட்டாரத்தில் போட்டியிடுகிறார்.

### 13ம் வட்டாரம்

தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர்களுள் ஒருவரும் துடிப்புள்ள வாலிபருமான திரு. சோ. சிவரெத்தினம் இவ்வட்டாரத்தின் கட்சி ஆதரவு பெற்ற வேட்பாளர்.

### 14ம் வட்டாரம்

தமிழரசுக் கட்சி முக்கிய உறுப்பினரான திரு நா. த. செல்லத்துரை இந்த வட்டாரத்தில் அபேட்சகராகவுள்ளார். மாநகர சபையில் அடிக்கடி பல தீர்மானங்களைக் கொண்டு வந்து நிர்வாகச் சீர்கேடுகளை அம்பலப்படுத்துபவர்.

### 15ம் வட்டாரம்

தமிழரசுக் கட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டு, தடுப்புக் காவலில் இருந்தவரும் கட்சியின் முக்கிய உறுப்பினருமான திரு. பீட்டர் சோமசுந்தரம் இந்த வட்டாரத்தில் போட்டியிடுகிறார்.

### 16ம் வட்டாரம்

திரு. ஜே. எஸ். அழகையா மாநகர சபை உறுப்பினராக விருக்கும் போது, நிர்வாகச் சீர்கேடுகள் பலவற்றை அம்பலப்படுத்தியமைக்காகப் பெரும் சோதனைக்குள்ளாக்கப்பட்டவர். கட்சியின் ஆதரவுடன் போட்டியிடுகிறார்.

ஊழல் நாற்றத்தை நகர மக்கள் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நகரசபை நிர்வாகத்தைச் சீர் பெறச் செய்ய வேண்டும். நிலையான உறுதியான நகர ஆட்சியை நிறுவ வேண்டும். தனிப்பட்டவர்களின் சுயநல வேட்டைக்கு இம்மியளவும் இடமளிக்கக் கூடாது. அவற்றைச் செய்வதெப்படி?

நகர மக்களின் நலன்களையே சதா கண்ணும் கருத்துமாகக் கவனிக்கக் கூடிய, ஊழல்களற்ற, நேர்மையான, சேவை ஆர்வமிக்க, ஆற்றல் மிகுந்த, மக்களின் உரிமைகளைப் பேணும் நல்லவர்களையே மாநகர சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்தல் வேண்டும்.

அதனைச் செய்ய மக்களுக்கு இதோ ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இத் தேர்தலில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் போட்டியிடுகின்றனர்.

ஊழல்களைக் களைந்தெறிந்து மாநகரசபையைச் சுத்தப்படுத்த தமிழரசாரால் மட்டுமே முடியும். தன்னலமற்ற சேவையை அவர்களிடமிருந்தே நகர மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பணியாற்றும் திறனும் தியாக உள்ளமும் நேர்மையும் கட்டுப் பாடும், உறுதியான இலட்சியமும் தமிழரசாரிடமே உண்டு.

ஆகவே தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களையே தங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து, தமிழ் பேசும் மக்களால் [illegible] ஏற்றிப் போற்றும் அளவுக்கு மாநகர சபையின் நிர்வாகத்தைச் சீர் செய்து சிறப்புறச் செய்ய முன்வருமாறு யாழ் நகர மக்களை வேண்டுகின்றோம்.

## திருமலைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்லாண்டு காலமாக, தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த செல்வாக்கைப் பெற்றுக் கொண்டு, தமிழ் பேசும் மக்கள் இழந்துவிட்ட உரிமைகளை மீட்பதற்காக அறப்போர் நடத்திக்கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சிக்கு ஆரம்பகாலம் தொடக்கம் நல்லாதரவு காட்டியது திருகோணமலை.

திருகோணமலையின் பண்டைப் பெருமை குன்றாமலும், புராணச் சிறப்பு அழியாமலும் பாதுகாக்க வேண்டியது திருமலை வாழ் தமிழ் பேசும் மக்களின் தலையாய கடமையாகிறது. இக் கடமையைச் செவ்வனே செய்து முடிக்கவல்லது தமிழரசுக்கட்சி ஒன்றுதான் என்பதும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. இந்த உண்மையைத் திருமலைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்ந்திருப்பதனால், நிச்சயமாகத் தமிழரசு வேட்பாளர் திரு. எஸ். எம். மாணிக்கராசா தேர்தலில் வெற்றிக்கொடி நாட்டுவார் என்பது நிச்சயமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் ராணுவக் கெடுபிடி வலுக்கிறது

## துரையப்பாவின் மேலதிகச் செலவுகள்

## மக்கள் வரிப்பணத்தை வாரி இறைத்துவிட்டார்

### டாக்டர். தருமலிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் திரு. அல்பிரட் துரையப்பா முதல்வராக இருந்த போது ஏற்பட்ட மேலதிகமான செலவுகள் பல இலட்ச ரூபாய்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பொது மக்களின் வரிப்பணத்தை அனுவசியமாகச் செலவு செய்பவர்களை நகரசபைகளுக்குப் போட்டியிட அனுமதித்தல் கூடாது என்று டாக்டர் ச அ. தருமலிங்கம் ஒரு பிரேரணையை யாழ். மாநகரசபையில் பிரேரித்தார்.

திரு. அல்பிரட் துரையப்பா முதல்வராகவிருந்த சமயம் ஏற்பட்ட மேலதிகச் செலவுகளைக் கணக்கிட்டு வெளியிடுமாறு டாக்டர் தருமலிங்கம் பல கேள்விகளைக் கேட்டார். அக் கேள்விகளையும் அதற்கு இறுக்கப்பட்ட விடைகளையும் கீழே தருகிறோம்.

இத்தகைய நபர்கள் நகர சபைக்குள் பிரவேசித்தால் விளைவு என்னவாகும் என்பதை யாழ். நகர மக்கள் உன்னிப்பாக அவதானித்து தீர்ப்பளிக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

கே: அ. முன்னைநாள் முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா மீது விதிக்கப்பட்டிருக்கும் மேலதிகக் கட்டணங்கள் (சர்சார்ஜ்)பற்றிய விபரங்களை விளக்கமாகத் தரவும்.

ப: 1. பெரியகடையில் பஸ் நிலையம் ஒன்று அமைப்பதற்கான கேள்விகள் பேரிலான மேலதிகக் கட்டணம் (சர்சார்ஜ்) ரூ. 993.

2. 1960ம் வருடத்தில் வீட்டு வினியோக மானிகளுக்குக் கோரப்பட்ட கேள்விகள் பேரிலான மேலதிகக் கட்டணம் ரூ. 2,168.50.

3. மாதிரிச் சந்தை அமைத்தல் சம்பந்தமாக நிர்மாண சிற்பிக்குக் கட்டணம் வழங்கிய வகையிலான மேலதிகக்கட்டணம் ரூ. 29,850.74

4. 1957 ம் வருடத்திற்குச் சின்னக்கடை, செங்குந்தர் சந்தைகளில் நில வாடகை அறவிடுவதற்கான குத்தகை உரிமையை வழங்கியது சம்பந்தமாக விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம் ரூ. 4.905.

#### உப கேள்விகள்:

பின்வருவனவற்றிற்கு, மேலும் சர்சார்ஜ் வரக்கூடியது சாத்தியமா?

1. கொமர் லொறிகள் வாங்கியமை ரூ. 40, 000.

2. மா நகர முதல்வராகத் திரு. அல்பிரட் துரையப்பா இருந்த காலத்தின் போது செய்யப்பட்ட நியமனங்களுக்கு வா. ப. செலவு, வி. செ. படி ஆகியவைகளுக்காக சபை வழங்கிய தொகை. இத்தொகையான ரூ. 130 000, அரசாங்கத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

3. மின்சார அதிகாரச் சட்டத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட தேவையற்ற மின்சார விஸ்தரிப்புகள் தொகை ரூ. 150,000.

#### விடைகள்

1. கணக்குப் பரிசோதனைகள் யாவும் முடிவடைந்துள்ளன. சர்சார்ஜ் உடனடியாக வரக் காத்திருக்கிறது.

2-3. கணக்குப் பரிசோதனை மா அதிகாரியால் பரிசீலனைகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளரான யாழ்ப்பாணப் பாராளுமன்ற அங்கத்தவர் அவர்கள், கணக்குப் பரிசோதனைப் பகுதியின் உயர்தர உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு இக்கணக்குப் பரிசோதனை விசாரணைகளைத் தாமதப்படுத்துவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து எனக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

கே: ஆ. தயவு செய்து திரு. அல்பிரட் துரையப்பா முதல்வராக இருந்த காலத்தில் வேலைக்கு எடுத்துக்கொண்டவர்கள் எத்தனைபேர் என்பது பற்றிய விபரங்களை விளக்கமாகத் தரவும்?

ப: 1951ம் வருடத்தில் ஜனவரி-161; பெப்ரவரி-159; மார்ச்-172; ஏப்பிரல்-182; மே-147; ஜூன்-157; ஜூலை-196; ஆகஸ்ட்-171; செப்டம்பர்-196; ஒக்டோபர்-239; நவம்பர்-326; டிசெம்பர்-398.

1960ம்வருடம் ஜூன் மாதம் வரை, ஜனவரி-392; பெப்ரவரி-372; மார்ச-138; ஏப்பிரல்-44; மே-294; ஜூன்-273.

## யாழ்ப்பாணம் இரத்த வங்கி

யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் போதுமான இரத்தம் இல்லாமையினால் பல சத்திர சிகிச்சைகள் நடைபெற முடியாது டாக்டர்கள் திண்டாடுகிறார்கள். பலபிரிவு இரத்தமும் இப்பொழுது உடனடியாக யாழ்ப்பாண இரத்த வங்கிக்குத் தேவைப்படுகிறது. இரத்த தானம் செய்யக் கூடியவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரி சென்று இரத்தம் அளித்து பல உயிர்களைக் காக்கும் பணியில் உதவுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். புகையிரத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது யாழ்ப்பாணம் அழைத்து விருந்து வேடிக்கை வைக்கலாமென்று யாழ்ப்பாணப் பிரதிநிதி கருதியிருக்கக் கூடுமென்றும், ஆதலால்தான் புகையிரத நிலையத் திறப்பு விழாவைக் குறிப்பிட்டபடி திறக்க வொட்டாமல் அதிகாரிகளைக்கொண்டு தடுப்பு ஏற்படுத்தினரென்றும் பொது மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

புகையிரத நிலையத்தைக் கட்டி முடித்த தொழிலாளர்களும் சம்பந்தப்பட்ட பல ஊழியர்களும் 20-11-63-ல் குறிப்பிட்டிருந்தபடி சைவ ஆசாரப்படி சாந்தி பூசை செய்து விமரிசையாகத் திறப்பு விழாவை முடித்து தடை போட்டவர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டார்கள் என்று தெரியவருகிறது.

சாந்தி பூசை முடிவடைந்ததும் அழகாக அலங்கரிக்கப்பட்ட புகைவண்டி ஒன்று, சுப முகூர்த்தத்தில் தொழிலாளர்களையும் உத்தியோகத்தர்களையும் ஏற்றிக் கொண்டு புது மேடையிலிருந்து காங்கேசன் துறையை நோக்கிப் புறப்பட்டது.

## மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

திய செயற்குழு அறிவிக்கும் என்று தெரிகிறது.

#### ஐ. நா. பதில் பரிசீலனை

ஐ. நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்துகையில் திரு. பி. டி எஸ். குலரத்தின "இலங்கையில் சிறுபான்மை மக்கள் எதுவிதமான இன்னல்களுமின்றி சகல உரிமைகளும் பெற்று வாழ்கிறார்கள்' என்று கூறியதை ஆட்சேபித்துத் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் ஐ. நா பொதுச் சபைக்கு அனுப்பிய தந்திக்கு ஐ. நா. மக்கள் உரிமைப் பகுதியால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் செயற்குழுவினரால் பரிசிலனை செய்யப்பட்டது.

அப்பதிலில் கண்ட ஒழுங்குப்படி, இங்கு நிலவும் இன ஒதுக்கல் நடவடிக்கைகளையிட்டு விரிவான மகஜர் ஒன்றினைத் தயாரித்து ஐ. நா. சபைக்கு அனுப்புவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

#### கண்டனம்

மன்னாரில் பண்டுதொட்டு வாழ்ந்து வரும் இந்திய... பரம்பரைக் குடியானவரைக் "கள்ளத்தோணி"கள் என்று ராணுவமும், பொலீசும் துன்புறுத்துவதையும், கதிர்காமத்துக்குச் சென்ற துறவிகளையும், யாத்திரிகர்களையும் கைது செய்து தடுப்பு முகாமில் வாட்டி வதைப்பதையும் செயற்குழுத் தீர்மானம் ஒன்று வன்மையாகக் கண்டிக்கிறது.

மலைநாட்டில் வதியும் தமிழ்க் குழந்தைகளுக்குச் சிங்களத்தைத் திணிக்கும் நோக்குடன், சிங்களத்தைப் போதனா மொழியாக்குவதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றினையும் செயற்குழு நிறைவேற்றியது.

தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுமை புரியத்தக்கதானதும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுமான நிதி மசோதாவின் 58, 59 வது ஷரத்துக்களையும் கட்சி செயற்குழு கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

#### பாதயாத்திரை

தொண்டமானாறு செல்லச்சந்நிதியில் முடிவடைந்த பாத யாத்திரையை மீண்டும் தொடர்ந்து ஆரம்பிப்பதுடன், கிழக்கு மாகாணத்தில் பாத யாத்திரையை ஆரம்பிப்பதெனவும் முடிவு எடுக்கப்பட்டது.

## புகார்களை விசாரிக்கத் தயங்குவதேன்?

ராணுவம், பொலீஸ் ஆகியவற்றின் உதவியுடன் வட பகுதியில் சிங்களத்தை அமுலுக்குக் கொண்டு வரவும், தமிழ் பேசும் மக்களைப் பயமுறுத்தித் துன்புறுத்தவும் அரசாங்கம் முயற்சிகள் எடுத்து வருவதாகப் பொதுமக்கள் கருதுகின்றனர்.

ராணுவத்தினரின் அட்டகாசம் வட பகுதியில் மென்மேலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. கள்ளக் குடியேற்றத் தடுப்புக்கென அனுப்பி வைக்கப்பட்ட ராணுவ வீரர்கள், பொதுமக்களின் தனிப்பட்ட வாழ்க்கை முறைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் அளவுக்கு முன்னேறிவிட்டனர்.

வடபகுதிக் கரையோரப் பகுதிகளில் மக்கள் குடியிருக்கும் இல்லங்களுக்கு அருகாமையெல்லாம் ராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

வடபகுதியில் முகாமிட்டுள்ள ராணுவத்தினர் பற்றி கடுமையான புகார்கள் செய்யப்படுகின்றன. அவர்களில் சிலர் இரவு வேளைகளில் வீடுகளில் புகுந்து சாதாரண மக்களை அடிக்கவும் துன்புறுத்தவும், ஏன் மானபங்கம் செய்யவும் கூட முயற்சித்து வருவதாகவும் செய்திகள் வந்து குவிகின்றன. பல முறை இவற்றையிட்டு முறையிட்டும் எதுவித பலனும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

பொதுமக்களிடம் வீண் வம்புக்குப் போவதனால் சில ராணுவ வீரர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

மயிலிட்டிக் கிராமத்தில் தீபாவளி அன்று ராணுவத்தினர் மிகக் கேவலமாக நடந்து கொண்டனர் என்றும், இதையிட்டும் ஏனைய ராணுவ அட்டகாசங்களைப் பற்றியும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் திரு. செல்வநாயகம் பிரதமருக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

யாழ்ப்பாணம் தொலைபேசி, தந்திக் காரியாலயத்திலும் ராணுவத்தினர் ஊழியரைப் பயமுறுத்தியதைத் தொடர்ந்து அங்கு பொலீஸ் காவல் ஏற்பாடு செய்யப்பட்டது. 'பொலீஸ் காவல் நீங்கியதும் கவனித்துக் கொள்கிறோம்,' என்று சில ராணுவத்தினர் கறுவிக் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

ஊர்காவற்றுறை—காரைநகர் துறைகளிலும் கடற்படையினரின் அட்டகாசங்கள் நாளுக்குநாள் கூடிக் கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரவுவேளைகளில் குடித்துவிட்டு கடற்படையினர் ஊர்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருவதாகவும் பலதரப்பட்ட புகார்கள் பிரதேசப் பொலீசாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

வடபகுதியில் தாங்கள் நடாத்தும் காட்டு தர்பாருக்குத் தங்கள் தலைமைப் பீடம் பூரண ஆதரவு கொடுக்கும், ஆதலால் தாங்கள் நினைத்தபடி எதையும் செய்துவிடலாம் என்று ராணுவத்தினர் கருதுவதாகவும் கூறப்படுகிறது. 1961ல் யாழ்ப்பாண மக்களைத் துன்புறுத்தக் காரணமாயிருந்ததாகக் கூறப்பட்ட தளபதி உடுகம ராணுவத் தலைவராக நியமனம் பெற்றதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் தெரிகிறது.

வடபகுதியில் ராணுவத்தினரின் அடாத செயல்கள் பற்றிப் புகார் செய்யும் போது அதைப்பற்றி விசாரணை நடத்தாமல், அதற்குப் பதிலாக மென்மேலும் ராணுவத்தினர் அங்கு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. இச் செயல் தமிழ் பேசும் மக்கள் துன்புறுத்தப்படுவதை அரசாங்கம் சட்டை செய்யவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறதென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.


### உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கொர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட ப்ரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மாமி

எழுதியவர்: தேவன்-யாழ்ப்பாணம்

எனக்கு அப்பா அம்மா வைத் தெரியாது. நான் பிறந்தவுடனேயே அம்மா போய் விட்டார். கொஞ்சக் காலத்துக்குப் பின்பு என் அப்பாவும் காலமாகி விட்டார். ஆனல் அவர்களில்லேயே என்று நான் தவிக்கவில்லை. என் பாட்டி—அது தான் அம்மாவின் அம்மா—தான் என்னை வளர்த்து வந்தா. இதெல்லாம் பழைய கதை. இப்போது மறந்து விட்டவை. நான் படித்து வளர்ந்து பெரியவனுகி ஒரு உத்தியோகமும் பெற்று விட்டேன். உத்தியோகமாகி கொழும்புக்கு வந்ததிலிருந்து என் மாமாவுடனேயே இருக்கிறேன். என் மாமாவென்ருல் அம்மாவின் தம்பி. எனக்கு ஒரு மாமா தான். அவர் பிரம்மச்சாரி. எனக்கு மேற்பார்வையாயுள்ள ஒரு ஆண் அவர்தான். மற்றது தான் என்னை வளர்த்த பாட்டி. அவவும் செத்து இப்போது நாலைந்து வருஷமாகிறது. எனக்கு ஊருக்குப் போக வேண்டிய தேவையேயில்லை. என் மாமா மட்டும் நில புலன்களை இடையிடையே போய்ப் பார்த்து விட்டு வருவார்.

அன்ருெருநாள் ஒரு நடன நிகழ்ச்சி ஒன்றுக்குப் போனேன். என் மாமாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. ஆனல் எங்கள் கந்தோர் ஊழியர்களின் நலவுரிமைச் சங்கத்தின் நிதி வளர்ச்சிக்காக நடந்த நாட்டியக் கச்சேரி அது. கட்டாயமாக என்மீது ஒரு நுழைவுச் சீட்டு திணிக்கப்பட்டது. அது 'காட்டிலை போகாமல்'— வீணுக்காமல்-இது என் பாட்டியிடமிருந்து எனக்கு ஊறிய குணம்—கச்சேரி பார்க்கப் போனேன். போன இடத்தில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. அன்று நல்ல மழை. நான் குடையோடு மண்டப வாயிலில் நின்றேன். ஒரு கார் வந்து நின்றது. அதில் வந்தவள்தான் அன்று நாட்டியமாடிய பெண். வீட்டிலேயே 'மேக்-அப்' எல்லாம் செய்து கொண்டு வந்தாள். கதவைத் திறந்ததும் நான் விரித்த குடையுடன் காருக்குப் பக்கத்தில் நின்றேன். பிறருக்கு உதவுகின்ற சுபாவமும் என் பாட்டியின் ரத்தத்திலிருந்தே ஊறியது. ஏற்பாடு செய்தவர்கள் அங்குமிங்கும் அலுவலாக இருந்தவர்கள் ஓட்டமாய் வந்தார்கள்.

அதற்கிடையில் காரிலிருந்து மண்டபம் வரை—பத்து அடி தூரமிருக்காது—என் குடையின் கீழ் வந்தாள். அந்தப் பத்து அடியும்—அவளுடைய உடையின் சரசரப்பும் அவளுடைய உடலில், முகத்தில், தலையில் தடவியிருந்த வாசனைத் திரவியங்களின் வாசனையும் என்னைத் திணறடித்தன. அப்புறம் நான் சபையின் ஒரு மூலையில். அவள் ஒளி விளக்குகளின் மத்தியில், மேடையின் நடுவில், பார்த்தவர் கண்ணுள், இதயத்துள். ஆட்டம் முடிந்தது. வீட்டுக்குப் போனேன். 'மழையில் என்ன நடனம்?' என்று பேச்சு வாங்கினேன்.

மறு நாள் என் நண்பன் ஒருவனை ஊருக்குப் போகிற ரயிலில் சந்திக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு பெட்டியாகதலையை நீட்டித் துழாவிப் பார்த்துக் கொண்டே போனேன். ஒரு இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அவள். 'நீங்கள்'... என்ருள்.

"ஆம். நான்..." என்றேன். புரிந்து கொண்டேன். குடை பிடித்த விஷயத்தைத் தவிர வேறென்ன இருந்தது நமக்குள்ளே? "அப்புறம் நீங்கள் முழு ஆட்டத்தையும் பார்த்தீர்களா? எப்படியிருந்தது?" என்ருள். நரைக் கிறல்களுடன் ஒரு முதியவர் என்னை நிமிர்ந்து என்ன சொல்லப் போகிறேனென்று பார்த்தார். தகப்பனுராயிருக்க வேண்டும்.

"இல்லை. ஏன்? நன்ருயிருந்தது..." என்றேன்.

"இது தான் கொழும்பில் முதல் தடவை. அது தான் கேட்டேன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள். அவளுடைய பற்களின் வெண்மையும் கன்னத்தில் விழுந்த குழிகளும் என்னை உற்றுப் பார்க்கச் செய்தன.

"நான் புரொபெஷனல்" என்ருள். எனக்கு பொருள் சரியாகப் புரியவில்லை. 'அமெச்சூர், புரொபெஷனல்' என்ற பதங்களையெல்லாம் நன்கு கேள்விப்பட்டிருக்கிறேன். இவள் குறிப்பிடுவது............தொழிலாய் கொண்டு விட்டேன், நன்ருயிருந்தால் தானே இனிமேலும் 'சான்ஸ்' வரும் என்பதையா? இருக்கலாம்.

நான் என் நண்பனைக் காணவில்லை. புகையிரதம் நிலையத்தை விட்டு இரையும் போது நான் அவளுக்கு கைகளை உயர்த்தி ஆட்டிக் காட்டிக் கொண்டிருந்தேன். எனக்கு காதல் அப்படி, இப்படியென்ருெரு வியாதியிருக்கவுமில்லை, அப்போது ஏற்படவுமில்லை. கல்யாணத்தைப் பற்றிதான் முன்பு சிந்தித்திருக்கிறேன். பின்னேயென்ன? எல்லாருக்கும் என்ருே நடக்க வேண்டியதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில் தவறென்ன? இதில் ஒளிப்பு மறைப்பு எதற்கு?

எனக்கு வருகிறவள் லட்சணமாய், சிக்கனமாய் குடும்பத்தை நடத்தத் தெரிந்தவளாய் இருந்தால் போதும்......இதற்கு மேலே யோசிக்க எனக்கு நேரமிருப்பதில்லை. இந்த யந்திர வாழ்க்கையில், வேகம் அவசரம் என்று ஆலாய்ப் பறக்கையில் யார் யோசிக்கிருர்கள்? எதைப் பற்றி? ஏன? எந்த நேரமும் எந்த மனிதனும் காதல் கலியாணம் என்று கனவு கண்டபடியே இருக்கிருனு, என்ன?

அன்று வீட்டுக்குப்போய்ப் பேசிக் கொண்டிருக்கையில் மாமாவிடம் "ஊரில் உங்களுக்கு வடிவேலு என்ருெருவரைத் தெரியுமா?" என்று கேட்டேன். ரயிலடியில் முழு விவரமும் சேகரித்து விட்டேனே.

"எந்த வடிவேலு?"

"அவருக்கு ஒரு மகள் 'டான்ஸ்' ஆடுகிருளே."

"சீ, சீ! விட்டுத்தள்ளு. மேனிமினுக்கியவள். தேவடியாச்சாதி......"

ஏதோ தொடக் கூடாத அழுக்கைப் போல, மிகவும் அசிங்கமான பொருள்போல முகத்தைச் சுளித்து வெறுப்பைக் காட்டினுர் மாமா. மேலே நான் பேசவில்லை.

வெகுநாட்களுக்குப் பிறகு — எங்கள் வீட்டு வழியாகப் போனுள் — அந்த மோகன சுந்தரி. நம்புவது கஷ்டமாகத்தானிருக்கும். ஆனல் அப்படித்தான் நடந்தது. கொழும்புக்கு ஒரு நாடக கோஷ்டியுடன் சேர்ந்து நடிப்பதற்காக வந்திருந்தாள். ஒத்திகைகளுக்காக சில தினங்களுக்கு முன்பாகவே வந்துவிட்ட அவள் எங்கள் வீட்டுக்கு அப்பால் ஒரு வீட்டில்தான் தங்கியிருக்கிருளாம். மாமா இல்லாத வேளையில் அவளைக் கண்டேனு?

வெளியே பேச்சுக் குரல் கேட்டு மாமாவே வந்துவிட்டார். அதுவும் பெண் குரல். மருமகனைக் கண்காணிக்க வந்துவிட்டார். அவருடைய முகமே இதுயார் என்று கேட்டது. அவளுடைய பூர்வீகத்தைச் சொல்ல எனக்குப் பைத்தியமா? "வந்து... இவ...என்..." என்று நான் தடுமாறுகையில் சிவகாமி — அவள்தான் அந்தச் சுந்தரி — "நான் இரண்டு வீடு தள்ளியிருக்கிறேன். எங்க ஊரவர் போல இருந்ததும் விசாரிக்கலாம் என்று பார்த்தேன்" என்று என்னைப் பிணையெடுத்தாள்.

"வா. வா..."

யார் என் மாமாவா இப்படிச் சொல்கிருர்? என்னல் நம்பவே முடியவில்லை. நான் "மாமா" என்பதைப் பார்த்து அவளும் "மாமா" என்று குழைந்தாள். அவள் கூத்தாடிச்சி என்று தெரிந்தால்... துடைப்பக்கட்டு கண்களுக்குத் தெரியக்கூடிய இடத்தில்தான் கிடந்தது.

அப்புறம் அடிக்கடி அவளைக் கண்டேன். நான் இல்லாத வேளையிலும் வந்து விசாரித்துவிட்டுப் போகிருள் போலிருக்கிறது. மாமாவோ இப்போது வீட்டை விட்டு அதிகம் வெளியே போவதில்லை. "என்னை 'மேய்க்க' வேண்டுமல்லவா?" என்று எண்ணினேன்.

நாடக நாள் வந்தது. போனேன். முதல் சீட்டில் மாமா இருந்தார். திகைத்துப் போனேன்.

இப்போது அவர் பிரமச்சாரியாயில்லை. அந்தத் 'தேவடியாள்' என் மாமி. அவளை நான் வையவில்லை. எப்போதாவது நான் வாய் திறந்து சொன்னேனு 'நான் காதலிக்கிறேன்' என்று? காதலித்தேனு நான்? எனக்கே நிச்சயமாய்த் தெரியவில்லை. சமவயதுள்ள என்னை அவள் ஏன் விரும்பப் போகிருள்? அவள் எனக்கு மாமிக்குத் தான் சரி. 'இந்தப் பழம் புளிக்கும்' என்கிற நியாயமல்ல. உண்மைதான்.

என் பாட்டியிருந்த இடத்தில் இப்போது என் மாமி — மாஜிக்கா... இல்லையில்லை... என் மாமி, மாமி, மாமி.

(யாவும் கற்பனை)

## இஸ்லாமிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பார்த்திருந்தால், அழிந்துவிடும் நமதுரிமை. தனித்துச் செய்ய முடியுமா? எனத் தயங்கினுல் தாய், தரகர் கைக்கு ஆளாகிவிடுவாள்.

இதுவரை இஸ்லாமியர் இளைய சகோதரர் எனக் கோஷமிட்ட இனம்; இன்று இருந்ததையும் இல்லா தொழிக்கக் கங்கணங் கட்டிவிட்டது. பல குரோதங்களால் பேதமைக்குள்ளான நாம் ஒன்று படுவோம்! இஸ்லாமிய சகோதரத்துவத்தை ஓங்கரிப்போம்! அதோ! கிழக்கிலும்-கிருந்தையிலும் அதன் ஒலி! எல்லாம் எமது நாடு! எங்கும் எமது சமூகம்! புறப்படுவோம்!


வாலிபர்கள் வளையாத ஈட்டிமுனைகள். சமயத்திற்காகச் சகுனம் பாராது சண்டையிடும் சம்மட்டிகள், சமூகத்துக்காகத் தம்மையே அர்ப்பணிக்கும் சந்தனக் கட்டைகள். உரிமைக்காக உடலையே உவந்தளிக்கும் உருவச் சிலைகள்.

சத்தியத்தை நிலைநாட்ட சன்மார்க்கத்தைத் தழைக்கச் செய்ய இதோ! புறப்படுவோம்!

"ஞாரே தக்பீர்! அல்லாஹு அக்பர்"

## செயற்கை கண் எலும்பு தயாரிப்பு

மேற்கு ஜெர்மன் விஞ்ஞானியான டாக்டர் ஹென்றி தியாலே செயற்கை முறையில் கண்கள், எலும்புகள், பற்கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிருர். 40 வருட காலமாக நடாத்தி வந்த ஆராய்ச்சியின் பயனுகவே இது சாத்தியமாகிறது.

உழவுத் தொழிலுக்கு உகந்த உன்னத ஜோடி!
டேவிட் பிரவுண் டிராக்டர்
அது புதிய
கொர்ரி டில்லர்

GP-AM-D8-1
துரித வேலை — கூடுதல் லாபம்!
ஆச்சர்யகரமான புதிய கொர்ரி டில்லரை உங்களது டேவிட் பிரவுனேடு சேர்த்து பணியாற்றும் போது லாபத்தையும் நேரத்தையும் வெகுவாக மிச்சம் பிடிக்கலாம்.
அங்கீகாரம் பெற்ற எல்லா வியாபாரிகளிடத்திலும், அநுராதபுரத்திலுள்ள எமது சொந்தக்கிளை வேலைத்தளத்திலும் எப்பொழுதும் பரிபூரண ரகவாரியான பாகங்களும் அத்துடன் முதல்த் தரமான சேவையும் கிட்டும், பயிற்றப்பட்ட நபர்களைக் கொண்ட முழு சாதனங்களையும் உடைய சேர்விஸ் வேன்கள், உங்கள் சாதனம் அப்பழுக்கின்றி இயங்குவதற்கு உத்தரவாதமளிக்கும்!
அஸோஸியேட்டட் மோட்டோர்வேய்ஸ் லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையைப் பேணி புதுமை காணுவோம்

## நம் இனம் வாழ உரிமைப் போர் புரிவோம்

பழமையுடன் இணைந்து அதன் அத்திவாரத்திலே புதுமையை கட்டி எழுப்பாத சமுதாயம் லாயக்கற்று விடும். பழமையின் அடிப் படையில் தான் புதுமை வளர முடியும். தமிழினத்துக்குப் பழ மையான வீர வரலாறு உண்டு. பழம் புகழைப் பேசிக் காலத் தைக் கழிக்காது, புதுமையைக்காண—மறுமலர்ச்சியை அடைய ஆக்கவேலைகளில் இறங்க வேண்டும். அதற்கான வழி அன்பி ஞல் அமையவேண்டும்.

பழம் பெருமை பேசி பல்லுடைபடும் பழையவனுய் இருக்க மாட்டான் வீறு கொண்டெழுந்துள்ள புதிய தமிழன். அவன் பொங்கி யெழுகின்ற உரிமை வேட்கை கொண்டு, அதற்கு உயிரையும் கொடுக்க அஞ்சாத புதிய பரம்பரையைச் சேர்ந்தவன். அவன் நெஞ்சிலே நேர்மையும், நீதியும், சத்தியமும் கொண்டு தர்ம வழி நடப்பவன். ஆயுதம் அவன் தேவையல்ல. அகிம்சையே அவன் அணி. புறமுதுகு காட்டுவதல்ல, பொங்கி எழுவது அவன் குணம். ஆனுல் அந்த எழுச்சியில் ஆவேசம் இருக்காது; அன்புதான் இருக்கும். ஆணவம் இருக்காது. அருங்குணம்தான் இருக்கும். அவன் கூடிக் கெடுப்பவனல்லன். கூடி மகிழ்பவன். பலாத்காரமல்ல அவன் பாதை, சாத்விகம் அவன் வழி.

### எமது சரித்திரம்

மாறிவிட்ட தமிழனே! மாற்றப்பட்டுவிட்ட தமிழினமே, உன் இனத்தவன் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை யடைகிறேன். இன்றுதான் நீ நமது பழைய பரம்பரையாய் மாறிவிட்டாய்.

சொல்லாலே பழித்த கனக, விஜயரின் தலையில் கல் ஏற்றி, கன்னிக்குக் கோயிலமைத்த சேரன் செங்குட்டுவன் நம்மினத்தவன்.

கொடிகாக்க உயிர் கொடுத்த குணக்குன்று குமரன் நம் இனத்தவன்.

வீர சுதந்திரம் வேண்டி, கல்லுடைத்துசெக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளை நம் இனத்தவன்.

கண்ணற்ற தமிழருக்கு கண் கொடுத்து வழி காட்ட வந்திருக்கும் ஈழத்துக் காந்தி நம் இனத்தவர்.

உரிமைகாக்க உயிரையும் கொடுக்கும், கடமை காக்கும் நெஞ்சுரம் கொண்ட தமிழரசார் நம் இனத்தவர்கள்.

"செய் அல்லது செத்து மடி" என்ற தத்துவம் கண்டவர்கள் நாம்.

"யாகாவராயினும் நாகாக்க" என்ற உண்மையைக் கண்டவர்கள் நாம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த பண்பு கொண்டவர்கள் நாம்.

"வீர சுதந்திரம்" வேண்டி நின்றவர்கள் நாம். உலகிற்கு வழிகாட்டியவர்கள் நாம்.

இன்றுதான் நாம் நம் பெருமைகளை உணர்ந்துள்ளோம். தரணி ஆண்ட நம் இனம் தலைவணங்கவா வேண்டும்? வில்லேந்தி வந்த வரிடம் சொல்லாமல் அடி கொடுத்தவர்கள் நாம். தன்மானம் கொண்டவர்கள் நாம். தத்தும் வயதிலே, தாலாட்டுப் பாடி உறங்க வைக்கையிலே, தளராத உறுதியையும், தலைவணங்காத வீரத்தையும் ஊட்டி இருக்கிருர்கள் நமது அன்னையர்கள்.

### உங்களிடம் சில வார்த்தை

தன்மானத் தமிழர்கட்கும் சில வார்த்தைகள் — மேலே கூறியவையெல்லாம் கடந்த காலத்தின் கதை. இனிவரப் போகும், — நடந்து கொண்டிருக்கும் — காலத்தில் புதிய கதைகளை, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய கதைகளை, வீர சரிதங்களை உருவாக்குங்கள்.

வீரம் விளையாடிய — விளைந்த — நிலத்தில் வீணர்கட்கு இடமளியாதீர்கள். விழிகள்

புங்குடுதீவு
எஸ். சண்முகநாதன்

மூடிக்கொண்டிருந்தால் திறந்து கொள்ளுங்கள் அடிமைத்தனம் கண்களை மறைத்திருந்தால் அகற்றி விடுங்கள்.

மொழியுரிமை காக்க, குடியுரிமை பெற, வாழ்வுரிமை பெற, கல்லடியும் சொல்லடியும் பெற்றவர்களை எண்ணிப் பாருங்கள்.

### நினைத்துப் பாருங்கள்

1956ம் ஆண்டு பண்டாவின் அரசாங்கத்திலே பகுத்தறிவற்றவர்களால் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, உயிரை மறந்து, உறவை மறந்து, உரிமைகாக்க காடையரின் கல்லடியால் கலங்காத நம் தலைவர்களை நினைத்துப் பாருங்கள்.

காலிமுகத் திடலின் பட்டு விரித்த பச்சைப் புல் தரையில், சொட்டும் இரத்தத்தால் சொர்ணமயமாக்கிய அந்த நாளை நினைத்துப் பாருங்கள். — காலிக் கடலின் தண்ணீருடன்—தமிழர்களின் கண்ணீரும் கலந்த அந்தநாளை—பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய அந்த நாளை நினைத்துப் பாருங்கள்.

தமிழ்த் தாயின் கண்ணில் வழியும் நீர் துடைக்க, காடையரின் துப்பாக்கி முனையில் தன் இரு கண்களையும் அர்ப்பணித்த கடமை வீரன் எருவில் மூர்த்தியை நினையுங்கள்.

தமிழர்களின் கண்ணீரில் ஆரம்பித்த அந்தச் சத்தியாக்கிரகப் போரில், கண்ணீர்ப் புகைக்கும், துப்பாக்கி முனைக்கும் இடையேயும் கலங்காத நம தலைவர்களையும், காலொயுந்த, கையொடிந்த கடமை வீரர்களையும் நினைத்துப் பாருங்கள்.

கற்பைப் பறிகொடுத்த நம் அன்னையரையும் கன்னியரையும் நினைத்துப் பாருங்கள்.

### கடமை வீரராகுங்கள்!

கடைசியாக, கடமைக்காகவே உயிர்விட்ட நம் தலைவர்களை நினையுங்கள். அவர்கள் வீரர்கள்; தியாகிகள்; களத்தைக் கண்டு அஞ்சாதவர்கள். அதனுல்தான அவர்களால் வீரர்களாக முடிந்தது. கடமைக்காக, தமிழுக்காக உயிரையும் தந்தவர்கள். அதனுலேதான் அவர்கள் பெயர்கள் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள்—

காலம் உள்ளளவும் நிலைத்து
நிற்பார்கள்.
அவர்கள் சென்ற பாதை —
காட்டிய வழிதான்—நாம்
செல்லவேண்டிய பாதை —
ஒன்றை மட்டும் நன்ருக
நினைவில் வைத்துக்
கொள்ளுங்கள் —

உலகம் தோன்றிய நாள் தொட்டு உலகை உய்விக்க வந்தவர்கள், மகான்கள், வீரர்கள் யாவரும் தாயின் கருவில் இருந்து மனிதனுகத்

(13-ம் பக்கம் பார்க்க)

## 'இழந்த உரிமைகளை மீட்க மங்கையர் குலம் முன் வர வேண்டும்'

### திருமலை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

"தமிழ் அன்னையைக் காக்கும் பொருட்டு எவ்வித இன்னலையும் ஏற்கத் தமிழ் இன நங்கைகள் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். அற்ப சலுகைகளுக்காகச் சிங்கள மொழியைப் படிக்கு மாறு தமது கணவன்மாரைத் தூண்டும் சுயநல மாதர்களால் ஒரு தேசியஇனத்தின் விடுதலைக்குப் போராட முடியாது. அன்பு உள்ளமும், தேச பக்தியும் கொண்ட மங்கையரே ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் துயர் துடைக்கும் தகைமை பெற்றவர்."

இவ்வாறு திருமலைஇடைத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. மு. மாணிக்கராசாவை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள இன்னல்களையும், நெருக்கடிகளையும் களைவதற்கென நடைபெற விருக்கும் போராட்டங்களில் ஆண்கள் சளைத்துப் பின் வாங்கினுலும் மறக்குல மங்கையராகிய நாம் சளைக்கவோ பின் வாங்கவோ கூடாது. தமிழ் மக்களது இழந்த உரிமைகளை மீட்டுக் கொடுப்பதில் மாதர் நாம் முன்னணியில் நிற்கின்ருேம் என்பதை அறிந்து உலகோர் மெச்சும் வேளையில், இலங்கை அரசாங்கம் ஆட்டம் காண நேரிடும்.

எமது கட்சிக்குத் திருமலையின் சார்பில் ஒரு செம்மலைத் தெரிவு செய்ய வேண்டும். எதிர்வரும் போராட்டங்களில் தமிழரசுக் கட்சியின் சார்பில் திருமலைப் பிரதிநிதி ஒருவரைக் கலந்து கொள்ளச் செய்வதற்கான வழி வகுப்பது, திருமலை மக்களாகிய உங்கள் கடமையாகும். ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் என்றென்றும் இடம் பெறும் வகையில், திருமலை மக்கள் திரு. மாணிக்கராசாவை ஆதரித்து, தமிழரசுக் கட்சிக்குச் செல்வாக்கைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதில் நீங்கள் தவறமாட்டீர்களென்று எமது கட்சிக்கு அசையாத நம்பிக்கை உண்டு."

தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமை தாங்கிய இக் கூட்டத்தில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மாணிக்கவாசகர், நல்லையா, ஜனுப்கள் மசூர் மௌலானு, கபூர் ஆகியோரும் பேசினர். கூட்ட முடிவில், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழ் மொழி வாழ்த்துப் பாடல்கள் பாடினுர். தமிழரசுக் கட்சியின் திருமலை மாநாட்டு நிகழ்ச்சிகளை யொட்டிய படமொன்றும் திரையிடப்பட்டது.

## சிங்களப் பெண்கள் வேண்டும் சிங்களம் வேண்டாமோ?

### தமிழர்களை நையாண்டி செய்கிருர் பிக்கு

"சிங்களவர்களுக்கான உத்தியோகங்களையும் வசதிகளையும் அபகரிக்கவும், சிங்கள நாட்டில் உரிமை பாராட்டவும், சிங்களப்பெண்களை மணந்துகொள்ளவும் துணிவு கொண்ட தமிழர்களுக்கு சிங்கள மொழி மட்டும் கசப்பாக இருப்பது ஏன்? பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்தவர்களின் ஆங்கில மொழியை மோகித்தவர்களுக்கு சகோதர மொழியான சிங்களத்தில் ஏன் இந்த வெறுப்பு ஏற்பட வேண்டுமோ. தெரியவில்லை."

பௌத்த 'பலவேகயா' பிரமுகரும், செல்வநாயகம்-பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை முறியடிக்க மும்முரமாக உழைத்தவரும், வகுப்புவாத வெறியில் திளைத்த வருமான வண. அமரவம்ச தேரோ, மத்திய வங்கி சிங்கள இலக்கிய சங்கம், கலாச்சார சங்கம் ஆகியவற்றின் கூட்டத்தில் மேற் கண்டவாறு கூறினுராம்.

மத்திய வங்கியில் 1966ம் வருடம் செப்டம்பர் மாதம் 30ம் திகதிக்குப் பின்னரே சிங்களம் அமுலுக்கு வரும் என்று முன்னரே அறிவிக்கப் பட்டாகிவிட்டது. அவ்வறிக்கையை முறியடித்து அடுத்த ஜனவரியிலேயே சிங்களத்தை அமுலாக்க வேண்டுமென்று வாதிடுகிருராம் வண. அமரவம்ச தேரோ.

### சுவரொட்டிகள்

"1-1-1964 முதல் ஏக சிங்களத்தை அரசாங்க இலாகா அனைத்திலும் அமுல் நடத்தவும். இதற்கு இடையூருக இருப்பவர்களை விரட்டி விடவும்" என்ற, கருத்துக் கொண்ட சுவரொட்டிகள் அரசாங்க இலாகாக்களில் ஒட்டப் பட்டுவருகின்றன. சிங்களத்தைத் தீவிரமாக அமுல் நடத்த முயன்று வரும் தீவிரவாதிகளின் செயல் இது என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில விசேஷ மருந்துகள்

**பாலபந்து** (விளக்கெண்ணெய்) குழந்தைகளுக் குண்டாகும் கரப்பான், சொறி சிரங்குகள், மாந்தம், சளை, பூச்சிக் கோளாறுகள், கக்குவான் இருமல், இளைப்பு, இருமல், நெஞ்சு கிறுகிறுப்பு, மலச்சிக்கல், விதை வீக்கம் முதலிய எல்லா பால ரோகங்களுக்கும் சிறந்தது. ஒரு மாதக் குழந்தையிலிருந்து, 12 வயது வரைக்கும் கொடுக்கலாம்.

அளவு : 1 சொட்டு முதல் 10-15-20 சொட்டுவரை
விலை : ½ அவுன்ஸ் சீசா ரூ. 2-25

S. N. **குரு தைலம்** இம் மருந்தின் குணங்கள் எவருக்கும் தெரியும்படி பிரசித்தமானது. அனேக வருத்தங்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும் வெளிக்கும் பாவிக்கத் தகுந்தது.
விலை : டப்பா 1 ரூ. 2-00

**விரேசன மாத்திரை** விரேசனத்திற்கு விசேஷமான மருந்து காலையில் 1—2 மாத்திரை சாப்பிட்டு தண்ணீர் குடித்தால் பேதியாகும்; வெந்நீர் குடித்தால் நின்றுவிடும். விரேசனத்திற்கு இவ்வளவு நல்ல மருந்து வேறு கிடையாது.
விலை : 25 மாத்திரை ரூ. 3-00

**பிரஹத் ஜாத்யாதிகிருதம்** (வெளிப் பிரயோகத்திற்கு மட்டும்) வெட்டுக்காயம், குழிப் புண்கள், சொறி சிரங்குகள், இரத்த வாதப் புண்கள், (எக்ஸீமா) கரப்பான், மர்மங்களிலுண்டாகும் புண்கள், முதலிய நாள் பட்டதும் புதியதுமான எல்லா விதப் புண்களுடைய, வலியும், சீழ்வடிவதும், வீக்கமும், விரைவில் நிறுத்தி காயச் செய்கிறது. இம் மருந்தால் ஆருத புண்கள் கிடையாது.
விலை : 1 அவுன்ஸ் 2-25

**எஸ். என். குரு மெடிக்கல் ஹால்,**
80, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.



# எம். ஜி. ஆர்.-சிவாஜி ஒரே படத்தில் தோன்றுவார்கள்

## ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன



புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனையும், சிவாஜி கணேசனையும் ஒரே படத்தில் நடிக்க வைத்து, தற்பொழுதுள்ள இரு பிரிவு ரசிகர்களையும் ஒருங்கு சேர்த்து வேடிக்கை பார்க்கப்போவதாக ஒரு பிரபல தயாரிப்பாளர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். இந்த முயற்சி ஓரளவு கைகூடும் வரை தமது பெயரை வெளியிட விரும்பாத அந்தத் தயாரிப்பாளர் இரு நடிக மலைகளையும் பிணைக்க வல்ல சிறந்த கதை ஒன்றினையும் உருவாக்கிவிட்டாராம்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரித்த "கூண்டுக்கிளி" படத்தில் புரட்சி நடிகரும், சிவாஜி கணேசனும் ஒருங்கு நடித்துள்ளார்கள். அதன் பின்னர் இருவரையும் ஒரே சமயத்தில் ரசிகர்கள் எந்தப் படத்திலும் சந்தித்தது கிடையாது.

சிவாஜி சிறந்தவரா? எம். ஜி. ஆர். மேலானவரா? என்ற வாக்குவாதப் போட்டியில் ரசிகர்கள் உயிர் கொடுத்தும் சண்டையிடுவது இந்தியாவில் மட்டுமல்ல கடல் கடந்து இலங்கையிலும் பரவியுள்ளது.

அண்மையில், இந்த ரசிகச் சண்டைக்கு, யாழ்ப்பாணத்தில் ஒரு உயிர் பலியாகும் அளவுக்குக்கூட நிலைமை மோசமாகியதாகக் கூறப்படுகிறது.

**நமது சென்னை நிருபர்**

ரசிகர்கள் இவ்விரு நட்சத்திரங்களையும் வைத்துக் கொண்டு கட்சி கட்டிப் போர் புரியும் அளவுக்கு சிவாஜியும், எம். ஜி. ஆரும் பகையை வளர்ப்பவர்கள் அல்ல. ஸ்டூடியோக்களில் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொள்வார்கள். ரசிகர்கள் மத்தியிலேதான் பகையும் பூசலும் மலிவதைக் காண்கிறோம்.

இந்த நடிகர்களுடைய தயவை நாடிச் செல்லும் தயாரிப்பாளர்களோ, அல்லது 'காக்காய் பிடிப்பாளர்' களோதான் சிண்டு முடியும் கைங்கர்யத்தை மேற்கொண்டு பகையை வளர்க்க அடிகோலுகிறார்கள்.

இத்தகைய பகையுணர்ச்சியைப் போக்கடித்து விடவே தான் மேற்படி தயாரிப்பாளர், இருவரையும் ஒரே படத்தில் புகுத்தி நடிக்க வைக்கப் பெருமுயற்சி எடுத்து வருகிறார். தமது முயற்சி வெளியே தெரிந்துவிட்டால், 'சிண்டு முடியும்' சிலர்கள் தமது எண்ணம் ஈடேறவொட்டாமல் செய்து விடவும் கூடுமே என்று கவலை கொள்கிறார்.

சிவாஜியும், புரட்சி நடிகரும் சேர்ந்து நடிக்கும்போது இருவரையும் ஒரே பண்புடைய நண்பர்களாகவே தோன்ற வைக்க வேண்டுமென்பதனால் அதற்கேற்றாற் போல் சிறந்த கதையையே தேர்ந்தெடுத்துள்ளாராம். எதிரும்புதிருமாக இருவரும் நடிப்பார்களேயானால், ரசிகர்கள் மீண்டும் கட்சிகட்டிக் கொண்டு பொருத ஆரம்பித்துவிடுவார்களே. ஆகவே தான் நற்குணசீல நண்பர்களாக இருவரையும் சேர்த்து வைக்க விரும்புகிறார் தயாரிப்பாளர்.

## ரஞ்சன் பிரவேசம்

பல வருடங்களாக ரஞ்சன் தமிழ்ப் பட உலகிலிருந்து விலகியிருந்தார். தமிழ் நாட்டவரான ரஞ்சன் வடநாட்டு 'ஸ்டண்ட்' படங்களில் வெற்றியீட்டியிருந்தார். தமிழ்ப் படங்களிலிருந்து அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த ரஞ்சனை மீண்டும் தமிழ்ப் படப் பிரவேசம் செய்ய எத்திராஜ் மூவிசார் முயற்சி எடுத்துள்ளனர். அவர்கள் தயாரிக்கும் 'நாடோடி நண்ப' னில் ரஞ்சன் நடிக்கப் போகிறார். இப்படத்தின் கதை வசனத்தை பாண்டி செல்வராஜ் அமைக்கிறார்.

## எமது விமர்சனம்

## ஜிஷ் தேஷ் மென் கங்கா பேத்தி ஹை

புண்ணிய நதியான கங்கை ஓடும் பூமியில் புனிதம் குன்றாது புகழும் பெருமையும் ஓங்கி வளர வேண்டும்; பொய்யும், புரட்டும், களவும், கொலையும் மாய்ந்து மறைய வேண்டும் என்ற அற்புதமான கருத்தை மையமாக வைத்தே "ஜிஷ் தேஷ் மென் கங்கா பேத்தி ஹை" ("யாம் அனைவரும் கங்கையின் புத்திரர்களே") என்ற படத்தை ராஜ் கபூர் ஆர். கே. புரடக்ஷனசாருக்காகத் தயாரித்துள்ளார்.

கங்கை நதி ஊற்றெடுக்கும் இமயத்தைக் காண்கிறோம்; நதி பாய்ந்தோடும் வழிகளையும், அவற்றின் மருங்கில் அமைந்துள்ள புனித ஆலயங்களையும் தரிசிக்கிறோம்; கரை புரண்டோடும் கங்கை நதி தீரத்திலே நாமும் சிக்கி ஆனந்தமாகப் பொழுது போக்கிறோம். கதாநாயகனான 'ராஜ்' (ராஜ் கபூர்) உல்லாசமாகப் பாட்டிசைத்துக் கொண்டு கங்கை நதியிலே, ஓடத்திலே மிதக்கின்றபோதெல்லாம் நாமும் அவன்கூடவே உல்லாசமாக நடமாடுகின்றோமோ என்கின்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது. அத்தனை இயற்கையாகப் படமாக்கியுள்ளனர் — கங்கையின் அழகை.

ராஜ் கள்ளங்கபடமறியாத காளைப் பருவத்தனன். சுருக்கமாகச் சொன்னால் அவனுக்கு உலகமே தெரியாது எனலாம். கங்கை நதிக் கரை ஓரங்களில் ஆடிப் பாடி மகிழ்ந்து திரிவதுதான் அவனுடைய பொழுது போக்கு, தொழில் எல்லாம். எதிர்பாராதவிதமாக கொள்ளைக் கோஷ்டி ஒன்றுடன் கலந்து விடுகிறான். கொள்ளைக்குழுத் தலைவனின் மகள் கம்முவின் (பத்மினி) காதல் வலைக்குள் சிக்கி விடுகிறான். கொள்ளைக் கூட்டத்தவரின் உண்மை வேடம் புரிந்ததும், கொடிய பாவத் திரையிலிருந்து மீட்க அரும் பாடுபட்டு, இறுதியில் வெற்றி அடைவதுடன், தலைவனின் மகளையும் அடைகிறான்.

'ஆயுதத்தால் சாதிக்க முடியாதவற்றை அன்பினாலும், அஹிம்சையினாலும் சாதித்து விடலாம்' என்று அந்தக் கள்ளமில்லாத கொள்ளையுள்ளம் படைத்த ராஜ் அறிவு புகட்டுவது அற்புதமாக இருக்கிறது.

நடனங்கள், பார்ப்பவர்களையே உலுக்கி வைக்கும் அளவுக்கு விறுவிறுப்புடன் அமைந்துள்ளன. பத்மினியின் நீச்சல் காட்சிகள் வெகு பிரமாதமாகப் படமாக்கப்பட்டுள்ளன. ஒளிப்பதிவுக் கருவிகளுக்கு நல்ல வேலையைக் கொடுத்ததுடன் பத்மினியையும், அவரது வனப்பையும் நன்கு வெளிப்படுத்தக்கூடிய வகையில் தயாரிப்பாளர்கள் முயற்சி எடுத்துள்ளனர்.

வடநாட்டு மெல்லிசை மன்னர்களான சங்கர்-ஜெய்கிஷன் இருவரது இசை அமைப்பும் படத்துக்கு மேலும் விறுவிறுப்பை ஊட்டுகின்றது. மொத்தத்தில் ரசிகப் பெருமக்கள் பல முறை பார்த்துப் பரவசப்படத்தக்க பல அம்சங்கள் கொண்ட வெற்றிப் படம். கதையைப் புரிந்துகொள்ள மொழி இடைஞ்சலிருக்கலாமென்பதைத் தவிர இப்படத்தையிட்டு வேறு குறை கூற முடியவில்லை.

— நாதன்.



மறந்துவிடாமல் அடுத்த வாரம் என்னைச் சந்தியுங்கள் என்று எம். ஜி. ஆர். ரசிகர்களுக்கு ஞாபகமூட்டுகிறார் போலும். 29 ம் திகதி முதல் சரவணா பிலிம்சின் "பணத் தோட்டம்" சினிமாஸ் திரைகளுக்கு வருகிறது.

## அறிமுகப்படுத்துகிறோம்

மேடைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் பணியில் 'சுதந்திரன்' ஈடுபடுவதைப்பாராட்டி நமக்குப் பல கடிதங்கள் வந்துள்ளன. பல கலைஞர்களுக்குத் தாங்களே அறிமுகம் செய்து வைக்கும் முறை பிடிக்கவில்லை என்பதை நமக்குத் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே வெவ்வேறு நபர்களைக் கொண்டு தகவல்களைச் சேகரித்து அறிமுகப்படுத்தும் முறையையே கைக் கொள்ளுவதென எண்ணியுள்ளோம். முதலாவது அறிமுகம் அடுத்தவாரம் இடம் பெறுகிறது

வசதிக்கேற்றபடியே தான் வரிசை ஒழுங்குகள் அமைக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். தரப்படுத்தி அறிமுகப்படுத்தும் தொண்டினை சுதந்திரன் கொள்ளாது என்பது மட்டும் திண்ணம்.

பல நாடகத் தயாரிப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாடக விளம்பரங்களில் விசேட சலுகைகளைச் செய்து கொடுக்கவும் 'சுதந்திரன்' திட்டங்கள் வகுத்துள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம். இந்த விபரங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.

பலருடைய வசதியையும் உத்தேசித்து 'அறிமுகப்படுத்துகிறோம்' பத்திரத்தை அடிக்கடி பிரசுரிப்போம். கலைஞர்கள் இவற்றையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

—ஆசிரியர்.

## அறிமுகப்படுத்துகிறோம்

முழுப் பெயர் ........................................

முகவரி ........................................

........................................

துறை ........................................

(நாடகமா, நடனமா அல்லது வேறு வகையா என்பதைக் குறிப்பிடவும்)

பங்குபற்றிய நிகழ்ச்சிகள் ........................................

........................................

........................................

பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் கையொப்பம்

(18 வயதுக்குக் குறைந்த நடிகர்களும் பெண் கலைஞர்களும் அவசியம் நிரப்ப வேண்டியது)

........................................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீய ஆசிரமங்கள்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யம் என்பனவற்றை விட, வேறு எதுவுமே வைத்திருக்கக் கூடாது. இவ்விதமாக ஒருவனுக்குக் கதிரைகள் அவசியமில்லையென்றால், அவை இல்லாமல் சீவிக்க வேண்டும். அத்துடன், அவன் எப்பொழுதும், எவ்விதம் தனது வாழ்க்கையை எளிமையானதாக்கலாம், தனது தாய் நாட்டுக்குச் சேவை செய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியவனுவான்.

### பயமற்ற மனிதன்

"பயத்தினுல் பீடிக்கப்பட்டவன், அகிம்சையையோ, சத்தியத்தையோ பின்பற்ற முடியாது" என்றூர் காந்தி. ஆகவே, ஆசிரமத்திலுள்ளவர்கள், ராஜாக்கள், மக்கள், சாதி, குடும்பங்கள், கள்வர்கள், கொள்ளைக்காரர், புலி போன்ற பயங்கர மிருகங்கள் இவற்றின் பீதியிலிருந்து -ஏன்-சாவின் பயத்திலிருந்து கூட விடுபட்டவர்களாக இருக்க முயல வேண்டும். உண்மையிலேயே பயமில்லாத ஒரு மனிதன், மற்றவர்களுடைய எதிர்ப்பிலிருந்து சத்திய பலத்தினுல் அல்லது ஆத்ம சக்தியால் தன்னைப் பாதுகாத்துக் கொள்வான்.

ஆயிரக்கணக்கான மக்கள், ஆண்களும் பெண்களுமாய், காந்தியின் அடிச்சுவட்டைப் பின் பற்றிச் சென்றதுடன், கோயெத் (Goethe) தின் வார்த்தைகளில் சொல்லப் போனுல், பின் வருமாறு பிரார்த்தித்தனர்:

"உனது சைகையைப்
பற்றுவோம்
இளைப்பின்றி உழைப்போம்
அரை குறை அலுவல்கள்
விடுத்து
எம திதயங்களை மீட்போம்;
அழகு மிக்கதும், அதி
சிறந்ததும்
எல்லாமேயான
பரிபூரணத்துவத்தின்
ஒளிப்பிழம்பில் பலமாக
வாழ்வோம்"

அதன் பின், மீதி சரித்திரமாகிவிட்டது—பாரதத் தாயின் சுதந்திரம் நிறைவேற்றப்பட்ட சாதனை...!

# பழமையைப்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தோன்றினுர்கள். பிறக்கும் போதே தெய்வமாக வந்தவர்களல்லர். மகாத்மா காந்தி மனிதனுகப் பிறந்து தெய்வமானவர். நெப்போலியன், ஆபிரகாம் லிங்கன் இப்படிப்பலர்.

அவர்களைத் தெய்வமாக மதிப்பதற்குக் காரணமென்ன? அவர்கள் விளைத்த வீரம்தான். ஆகவே —

கடவுள் மனிதனுவதில்லை;
மனிதன்தான் தெய்வமாக
முடியும்.

இதனை நினைவில் வைத்து, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய, சாதனைகளை, தியாகங்களைப் புரிவோம் வாருங்கள்.

# சிங்கள ஊழியர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம் சுகாதார அதிகாரி திணைக்களத்தில் கடமையாற்றும் சிங்கள எழுதுவினைஞர்கள் தம்மிச்சைப்படி கட்டாக் காலிகளாகச் சுற்றித் திரிந்து வகுப்புவாத நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயல்பட்டு வருவதாக அறியப்படுகிறது. காரியாலய நேரங்களில் இவர்கள் யாருடைய கட்டளைக்கும் கீழ்ப்படிய மறுத்து, தாம் நினைத்தபடி கடமையாற்றி வருவதாகவும் தெரிகிறது.

இவர்களின் இந்த எதேச்சாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது திணைக்கள முதல்வர் திண்டாடுகிறூராம். சில சமயங்களில் அவர்களுடைய செயல் பற்றி மேல் அதிகாரிகள் ஏதாவது கேட்க நேர்ந்தால் அதற்குச் செவி மடுக்க மறுத்து வருகிறூர்களாம். தாங்கள் ஆளும் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தோரணையில் செயல்பட்டு வருவதாகவும், இவர்களின் நடவடிக்கையில் தலையிடுவது தமக்குப் பாதகமாக அமையும் என்ற பயத்தில் மேல் அதிகாரிகள் 'கப்சிப்' என்று இருந்தும் வருகிறூர்களாம். அதே நேரத்தில் காரியாலய உதவியாளர்கள் (ஆபீஸ் பியோன்) கூட இந்த எழுதுவினைஞர்களின் கட்டளைகளை சிரமேற் தாங்கிச் செயல்பட்டு வருகிறூர்களாம்.

# "வவுனியாவில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் கிராமத்தை எரித்தது" என்ற தலைப்பிட்டு கீழ்க்காணும் செய்தியைப் பிரசுரித்துள்ளது:-

"மாத்தளை "யட்டவத்த எஸ்டேட்" என்னும் தோட்டத்துக்குச் சென்ற மாத்தளை பொலீஸ் அங்கேயுள்ள "நாம் தமிழர் இயக்க" அமைப்பாளர்களின் "லயின்" அறைகளெல்லாவற்றையும் அவற்றிலுள்ள சாமான்களையும் நெருப்பு மூட்டி நாசமாக்கினர்.

நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் தோட்டத்தை அடுத்துள்ள ஒரு கற்குகையில் தலைமறைவாக இருக்கிறூர் என்ற செய்தி நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து கிடைத்துள்ளது. 'நாம் தமிழர்'களின் குழந்தை குட்டிகள் காட்டுக்குள் இருக்கின்றனர்.

மாத்தளை யட்டவத்தையில் "நாம் தமிழர்", இயக்கம் நடத்தி வந்த திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட ஒரு கலகத்தை அடக்கச் சென்ற பொலீஸ் கோஷ்டியை "நாம் தமிழர்" தாக்கியதே தீ மூட்டியதற்குக் காரணமாகும்.

"நாம் தமிழர்" வாள், கத்தி, கள்ளத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, கம்புத்தடி ஆகியவற்றுல் பொலீசாரைத் தாக்கியுள்ளனர். மூன்று பொலீஸ் அதிகாரிகள் கடுமையாகக் காயமடைந்துள்ளனர்."

### யாரிடம் வேண்டுவது?

இலங்கையிலுள்ள ரஷ்ய தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். வானவெளித் தம்பதிகளை யாழ் நகருக்கும் அனுப்பி வைக்குமாறு பல பிரமுகர்கள் ரஷ்ய அதிகாரியை வேண்டிக் கொண்டனராம்.

யாரிடம் எக்கேள்வியைக் கேட்பது என்பதைத் தெரியாமல் இப்பிரமுகர்கள் திண்டாடியுள்ளனர். இதே வேண்டுகோளை இலங்கை ஆட்சித் தலைமை அம்மையாரிடமல்லவா இவர்கள் கேட்டிருக்க வேண்டும்!

ஒரு ஆரோக்கிய குழந்தையும் ...குதூகலிக்கும் தாயும்



..நன்றி லக்டோஜனுக்கே

உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது— உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பண்டோதினேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |




நீங்கள் லக்டோஜனை நம்பலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உங்களுக்குத் தெரியுமா?

(இராஜேஸ்வரி-சூரியன், கோப்பாய்)

**கேள்வி?**

(1) நைல் நதியின் நன்கொடை எனப்படும் நாடு எது?

(2) 1914ம் வருட யுத்தத்தின்போது யுத்தக் களங்களில் உபயோகித்த வாயு எது?

(3) உலகின் மிகப் பெரிய அணையாகிய "நல்சொக்ரிடிட்" என்னும் அணையின் உயரம்எவ்வளவு?

(4) நீராவிக் கப்பலின் வெளிப்புறத்தில் ஒரு வரை (கோடு) இடப்பட்டிருக்கும், ஏன்?

(5) மண்ணெண்ணெய் நீரில் மிதப்பதேன்?

(6) வாயுவில் பொருட்கள் மிதக்குமா?

(7) ஒரு வினடிக்கு ஒளியின் வேகம் என்ன?

(8) ஒளியின் வேகத்தை எந்த விஞ்ஞானி கணித்தார்?

(9) சமதள ஆடியின் முன் அச்சிட்ட காகிதத்தைப் பிடித்தால் அதைப் படிக்கக் கஷ்டமாய் இருப்பதேன்?

**விடை:**

(1) எகிப்து.

(2) குளோரின் வாயு.

(3) 990 அடி உயரமுள்ளது.

(4) அக்கோடு கடலின் நீர் மட்டத்திற்குச் சமமாக வரும்வரையிலுமே கப்பலில் பாரமேற்றலாம். கடல் மட்டத்திற்குக் கீழே கோடு தாழுமானல் கப்பல் மூழ்கிவிடும்.

(5) மண்ணெண்ணெயின் அடர்த்தி நீரின் அடர்த்தியிலும் குறைவு.

(6) பொருளின் அடர்த்தி குறைவாக இருந்தால் மிதக்கும்.

(7) 185000 மைல்.

(8) 1675ம் ஆண்டில் 'ரேமர்' என்ற விஞ்ஞானி.

(9) அச்சிட்ட எழுத்துக்கள் இடவல மாற்றம் அடைந்திருப்பதால்.

## குறளுக்குப் புகழ் மாலை

**'தமிழழகன்'**

ஊவாகட்டவளே.

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்.

—ஔவையார்

ஓதற்கெளிதாய் உணர்த் தற்கரிதாகி தீதற்றோர் உள்ளுதோறும் உள்ளுதோறும் உள்ளம் உருகும்.

—மாங்குடி மருதனர்

தினையளவு போதச் சிறு புன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்து.

—கபிலர்

கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்தக் குறள்.

—இடைக்காடர்

எனது கிராமம்:

## கரவெட்டி

(ந. சிவநேசன்)

எனது கிராமம் கரவெட்டி. இக்கிராமத்திலிருந்து யாழ்ப்பாணம் பதினெட்டு மைல்கள் தூரத்திலுள்ளது. எனது கிராமத்தில் வசிப்பவர்களுள் அதிகமானேர் இந்து சமய மக்களே ஆவர்.

இங்கு நூற்றுக்கு அதிகமானேர் விவசாயம் செய்கிருர்கள். எஞ்சியுள்ளோர் அரசாங்க உத்தியோகத்தவர்கள். பல வேறு தொழில்களையும் உடைய உத்தியோகத்தவர்கள் எனது கிராமத்தில் வசிக்கிருர்கள். எனது கிராமத்தவர்கள் ஒற்றுமையையும் பொறுமையையும் பெரிதும் விரும்புபவர்கள். எனது கிராமத்தில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர்கள் யாவருடனும் சகஜமாகப் பழகுகிருர்கள்

எனது கிராமத்து இளைஞர்கள் அடுத்து வரப் போகும் உரிமைப் போரில் கலந்துகொள்வதற்கு மிகவும் ஆவலாயுள்ளார்கள். எனது கிரமத்திலுள்ள இளைஞர்களின் உற்சாகமும், ஆர்வமும் ஒரு சில 'பெரியோர்களிடம் இல்லை. இதையிட்டு கவலைப்பட்டாலும் காலகெதியில் எனது கிராமத்திலுள்ள அனைவரும் கட்சி பேதமின்றி ஒருமித்து உரிமைப் போரில் பங்கு பற்றுவார்கள் என்பது திண்ணம்.

எனது கிராமத்தில் நுணுவில் பிள்ளையார் கோவில், யார்க்கரு விநாயகர் கோவில் என்னும் இரு இந்து சமய ஆலயங்களும் கட்டைவேலி மெ. மி. தமிழ்ப் பாடசாலை ஒன்றும் நாமகள் நூல் நிலையம் என்னும் ஓர் வாசிகசாலையும் இருக்கின்றன. எனது கிராமம், சென்ற பல ஆண்டுகளாக ஒரு வாசிகசாலை இல்லாதிருந்தது. எனது கிராமத்திலுள்ள பெரியோர் ஒரு வாசிகசாலையை ஸ்தாபிப்பதற்குப் பெரிதும் முயன்றும் இறுதியில் முயற்சிகள் யாவும் சிதறுண்டன. இதை அறிந்த எனது கிராம இளைஞர்கள் தங்களது விடா முயற்சியாலும், ஒரு சில பெரியோர்களின் பண உதவியுடனும் சென்ற வருடம் 'நாமகள் நூல் நிலையம்' என்னும் ஒரு வாசிகசாலையை ஆரம்பித்தார்கள். எனது கிராமத்திலுள்ள இளைஞர்களின் விடாமுயற்சிக்கு இவ்வாசிகசாலை ஓர் சான்ருகும்.

எனது கிராமம் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த தொன்ருகும். இத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் ஆவர். இவர் கட்சிபேதமின்றித் தமிழ் பேசும் மக்களுக்காக உழைத்து வருகிருர்.

எனது கிராமம் முன்னேற்றப் பாதையில் தற்பொழுது சென்றுகொண்டிருக்கின்றது. இக்கிராமம் மென்மேலும் முன்னேற்றமடைய வேண்டு [illegible] அவா.

## 'புதுமைத் திருடன்' பரிசுத் திட்டம்

'புதுமைத் திருடன்' கதையில் உங்களுக்கு மிகவும் பரபரப்பூட்டிய கட்டம் எதுவென்று நீங்கள் எழுதி அனுப்பினுல், அவற்றுக்குள் சிறந்தனவற்றுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் 'வளர்மதி' அங்கத்துவப் பத்திரங்கள் மூன்று நிரப்பி அனுப்ப வேண்டும். கட்டுரைகள், தாளின் ஒரு பக்கத்தில், மையினுல், தெளிவாக எழுதி அனுப்பப்படல் வேண்டும் கட்டுரையின் நீளம் 150 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

முதற் பரிசு ரூ. 10/- பெறுமதியான புத்தகமாகவும், இரண்டாம், மூன்ரும் பரிசுகள் முறையே ரூ. 5/-, ரூ. 2/- பெறுமதியான புத்தகங்களுமாகும்.

பல மருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க முடிவுத் திகதி : 27—11—63 புதன்கிழமை வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதைக் கத்தரித்து அனுப்பவும்

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

கையொப்பம்

## பொல்லாத உலகம் தம்பி!

—செ. குணரெத்தினம், மட்டக்களப்பு—

வஞ்சகரின் சிரிப்பு—நம்மை
அஞ்சவைக்கும் நெருப்பு
நஞ்சவரின் பேச்சு—அதை
நம்பினுலுயிர் போச்சு!

கெட்டவரின் கூட்டம்—நம்மை
கேடு செய்யத் தூண்டும்
விட்டு விட வேண்டும்—அந்த
வீணர்களின் நட்பை!

பகட்டினிற்குத் தம்பி—இன்று
பல்லிளிக்கும் உலகம்
பகட்டினிலே தம்பி—என்ன
பண்ட முண்டு தம்பி?

நல்லவற்றைக் கேளு—தம்பி
நல்லாரோடு கூடு
பொல்லாதிந்த உலகம்—தம்பி
பொறுமையோடு வாழு.

அன்புள்ள மருமக்களே!

தீபாவளி வாழ்த்து அனுப்பிய மருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

'புதுமைத் திருடன்' பரிசுத் திட்டம் முடிவுத் திகதியை 20-11-63 லிருந்து 27-11-53க்கு மாற்றியுள்ளேன். மகிழ்ச்சி தானே?

வணக்கம்

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

## உங்கள் சிந்தனைக்கு

வாழ்வை இனியதாக்குவது அன்பு. கஷ்டங்களையெல்லாம் மீளச் செய்வது அன்பு. குடும்ப வாழ்க்கையை மேன்மைப் படுத்துவது அன்பு உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு. அன்பு பொலியுமிடம் சுவர்க்கம். அன்பு மறைந்த விடம் நரகம். மனமே நீ அன்பில் ஊறி வளர்க.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## 'புதுமைத் திருடனு'க்கு பாராட்டுகள்

அன்புள்ள மாமா!

நீங்கள் சுதந்திரன் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டுவந்த 'புதுமைத்திருடன்' என்னும் மர்மம் நிறைந்த குட்டித் தொடர் கதை வாசகர்களாகிய எங்களுக்கு அறிவையும் ஆர்வத்தையும் ஊட்டுவதாக இருந்தது. மேலும் தாங்கள் இவ்வாருன தொடர்கதைகளை வெளியிட்டு எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேம்.

வளர்மதி மருமக்கள்,
ச. சவுந்தரம்,
எஸ். செல்லம்,
பொ. கனகாம்பிகை.

சுதந்திரனில் வெளிவரும் உங்கள் "புதுமைத் திருடன்" என்ற தொடர்கதையைத் தவருது படித்து இன்புற்று வரும் வாசகர்களில் நானும் ஒருவன். உங்கள் கதையின் ஒவ்வொரு கட்டமும் வாசகர்களாகிய எம்மிடையே ஒருவித பரபரப்பையும் சுவையையும் ஒருங்கே அளித்து எங்களை அடுத்த கட்டத்தில் எது வரப்போகின்றதோ என்று எதிர்பார்க்கும் அளவிற்கு ஆக்கி விடுகிறது. ஒவ்வொரு கட்டமும் ஒவ்வொரு புதிராகக் காட்சியளித்து எம்மை மகிழ்விக்கின்றது.

—மனேரஞ்சிதம் .கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## வாலிபர் விழிப்படைந்தால் விடுதலை கிட்டுவது நிச்சயம்

### வாலிப முன்னணி திறப்பு விழாவில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசு வாலிப முன்னணி அலுவலகத்தை வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் திறந்து வைத்துப் பேசும்போது, "தமிழ்ச் சாதி சுதந்திரம் பெற்றுத் தன்மானத்துடன் வாழ வேண்டுமானால், வாலிபர்கள் விழிப்புக்கொள்ள வேண்டும். வாலிபர்கள் விழிப்படைந்த சமுதாயம் அடிமைப்பட்டதென்பது வரலாற்றிலேயே இல்லை. எனவே, வாலிபர்கள் தமிழ்த் தாயைக் காப்பாற்ற இன்றே விழிப்புக் கொள்ள வேண்டும். எதுவரினும் தளரா உள்ளத்துடன் அறவழியில் நின்று போராட இன்றே உறுதி பூண வேண்டும். இத்தாலியில் கரிபால்டி தலைமையில் "யௌவன இத்தாலிய வாலிபர் சங்கம்" என்ற விடுதலை இயக்கம் தொடங்கப்பட்டதே, இத்தாலியின் விடுதலைக்குக் காரணமாக இருந்ததெனலாம். இவ்வாறு பல்வேறு தேசங்களிலும் வாலிபர்கள் விழித்தெழுந்து போராட்டம் நடத்தியே உரிமை பெற்ருர்கள்; விடுதலை அடைந்தார்கள். இங்கும் வாலிபர்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்பதையே இவ்வலுவலகத் திறப்பு விழாக் காட்டுகிறது. நம் சமுதாயம் பிறரை நம்பி மோசம் போய்விட்டது. இனியாவது தன்கையே தனக்குதவி யென எண்ணித் தமிழ்த் தலைவர்கள் கட்டளைக்கமைந்து போராட உறுதி பூண வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் எமக்கு உரிமை பெற்றுத் தருவார்கள் என்பது பகற்கனவாகும். தொழிற் சங்க அமைப்புக்களே இதற்குச் சான்ருகும். இவர்களை நம்பித் தமிழ் தொழிலாளர் மோசம் போய்விடக் கூடாது. இன்னும் மலைநாட்டுத் தமிழர் பிரச்சினையில், இவர்கள் கருத்துச் செலுத்தவில்லை. எனவே தமிழ் மக்கள் தங்களுக்கென உள்ள ஒரேயொரு கட்சியான தமிழரசுக் கட்சியில் நம்பிக்கை வைத்து விட்டார்கள். அக்கட்சியின் கீழ் நின்று போராட உறுதிபூண்டு விட்டார்கள்" என்று கூறினர்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் டாக்டர் அ. வை. தங்கக்கணபதி அவர்கள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மேலும் அவர் பேசுகையில், "எங்கள் இயக்கம் அன்பை, அறத்தை அடிப்படையாகக் கொண்டு அகிம்சை வழியில் போராடும் ஓர் இயக்கமாக உள்ளதினல் வெற்றி நிச்சயம்" என்ருர்.

இன்னும் திருவாளர்கள் இராசா, ப. இராசகுரு முதலியோரும் பேசினர்.

### 'புலால் உண்ணுதவர்களே சைவர்கள்'

'புலாலுண்ணுதவர்களைச் சர்வ சாதாரணமாகச் சைவர் என்று அனைவருங் குறிப்பிடுவர். புலால் உண்பவர்களைச் சைவர் என்று யாரும் சொல்வதில்லை. ஆகவே சைவமதத்தவர்கள் புலாலுணவை நீக்கியவர்களாக வேண்டும்.'

மயிலங் கூடல் சைவ மகா சபையின் ஆதரவில் கடந்த சனியன்றிரவு சபைத் தலைவர் திரு. சி. அப்புத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாணி விழாவில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிய வித்துவான் கந்தசுவாமி அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்.

மாலை ஆறுமணிக்கு உயர் திரு. நடராசா சுவாமி அவர்களின் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையுடன் விழா ஆரம்பமானது. சுவாமிஜி அவர்கள் "நான் யார்?" "ஏன் பிறந்தேன்" என்னும் வினக்களை எழுப்பி, ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்தார்.

வித்துவான் கந்தசாமி அவர்கள் கல்வி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நிகண்டு ஆகியவற்றை முறையே ஆதாரமாகக் கொண்டு மனிதனின் வாழ்வு அமைய வேண்டும் என்றும், அதற்கு வாணி வழிபாடு அவசியமென்றும், வாணி வழிபாட்டின் முக்கியத்துவங்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

இன்னுலை அரசினர் வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. ஆ. கதிர்காமத்தம்பி அவர்களும் பேசினர்கள். 18-10-63 லிருந்து தொடர்ந்து நடைபெற்றுவந்த நவராத்திரி விழா, சனியன்று இடம்பெற்ற வாணி விழாவுடனும் இனிது நிறைவெய்தியது.

### காரைதீவு விவேகானந்தா சன சமூக நிலையம்

காரைதீவு விவேகானந்தா சன சமூக நிலையத்தின் சார்பில் திரு. க. சாமித்தம்பி அவர்களின் தலைமையில் கலைவாணி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திரு. கே. கே. ஆறுமுகம் பேசுகையில் 'கல்வித் தெய்வத்திற்கு விழா எடுத்துக் கொண்டாடும் நமது கிராமப் பெரியார்கள், 'தாம் பிறந்த நாட்டின் கல்வி அறிவு நிலை எவ்வாறு உள்ளது? பாடசாலைகள் எந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன?' என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் கல்வி அறிவும் ஒழுக்கக் கேடும் எவ்வளவு தூரம் சீரழிந்துள்ளன என்பது நமக்குத் தெரியும். இதில் ஆசிரியர்களை மட்டும் குறை கூற முடியாது. பெற்றோர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்' என்று கூறினர். திருவாளர்கள் ஆ. இராசதுரை, மு. கணபதிப்பிள்ளை வே. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பேசினர்

கிராமத்தைச் சூழ்ந்துள்ள பேரபாயங்களைவிட்டு, தமிழரசுக் கட்சித் தலைவர்கட்கு அனுப்பப்பட்ட மகஜருக்கு, தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் அனுப்பிய பதில் கடிதமும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. காரைதீவின் தேவைகளையிட்டு தமிழரசுக்கட்சி பாரா[illegible] ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### அட்டன் வட்டார தோ. பா. ஆ. சங்கம்

அகில இலங்கைத் தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் அட்டன் வட்டாரக் கிளைக் கூட்டம் 2-11-63 சனிக்கிழமை முற்பகல் அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் கூடியது.

திரு. சி. குழந்தை வேலு அவர்களின் தமிழ் மொழி வாழ்த்துடன் கூட்டம் ஆரம்பமாகியது. திரு. சி. சண்முகநாதன் தலைமை வகித்துப் பேசுகையில், தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் ஒரே சங்கத்தில் சேர்ந்து செயல் புரிந்தாலேயன்றி அவர்களை எதிர்நோக்கியிருக்கும் கஷ்டங்கள் தீரா எனக் கூறினர். செயலாளர் திரு. நா. கணேசபிள்ளை அறிக்கை வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டபின், சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அகில இலங்கைத் தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. மு. கந்தப்பு தோட்டப் பாடசாலை ஆசிரியர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைப் பற்றி விளக்கிச் சகல ஆசிரியர்களினதும் ஒற்றுமையை வேண்டினர். திரு. இ. இரத்தினம் அவர்கள் பேசுகையில் அடுத்த ஆண்டிலிருந்து தோட்டப்பாடசாலைகளில் சிங்களம் போதன மொழியாக வரவிருப்பதையும் அதனல் தோட்டச் சிறுர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படக் கூடிய கஷ்டங்களையும் விளக்கினர். அவர் இச் சிங்களத் திணிப்பை எதிர்க்கச் சகலரும் ஒன்று பட வேண்டும் எனக் கூறினர்.

### திவக ஆசிரியர் சங்கக் கூட்டம்

திவக ஆசிரியர் சங்கக் கிளையின் நிருவாக 9-11-63-ல் நயினதீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் திரு. ஐ. ஆ. இராமசுவாமி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

பின் வரும் விடயங்கள் சம்பந்தமாக வட பகுதி உதவி வித்தியாதிபதி அவர்களைப் பேட்டி காண்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

1. பின் தங்கிய சில திவகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்ருக் குறையை நிவர்த்தி செய்யும் வழிவகைகளை ஆராய்தல்.

2. அரசினர்பாடசாலைகள், பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகள் என்பவற்றுக்கிடையே கலந்து மாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் லீவுகளை ஒருமுகப் படுத்தல்.

3. நயினதீவுப் பாடசாலைகளின் சம்பளங்களை நயினதீவுத் தபால் நிலையத்திலேயே பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்தல்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் உயர்த்தல், விசேட பஞ்சப்படி வழங்கல், அவர்களை தோட்ட நிர்வாகம் வேலை நீக்கம் செய்யு முன் கல்வியிலாகாவின் அனுமதி பெற்றே அவ்வண்ணம் செய்தல் வேண்டும் என்பன பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாளர்கள் சி. கா. ராயன், த. செல்லத்துரை ஆகியோரும் பேசினர்கள். திரு. சி. குழந்தை வேலு அவர்களின் தமிழ் மொழி வாழ்த்துடன் கூட்டம் முடிவுற்றது.

## தமிழ்ப்பற்று மிகுந்த வீரமாமுனிவர் நினைவு விழா

கடந்த 13-11-63ம் திகதி கொஸ்லாந்தை மஹா வித்தியாலய தமிழ்ப்பிரிவு மாணவர் முன்னேற்ற மன்றம் வீரமாமுனிவரின் நினைவு விழாவைக் கொண்டாடியது.

விழாவுக்குப் பிரதம ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினர். தமிழ் மொழி வாழ்த்துப் பாவுடன் கூட்டம் ஆரம்பமாகியது. பேருரையில், தமிழ் வளர்த்த பேரியார்களின் நினைவு விழாவைக் கொண்டாடுவதன் நோக்கம், அவசியம் முதலியவற்றையும் அதிலும் இத்தாலியரான இவரை நாட் ஏன் கொண்டாட வேண்டும் என்பதையும், அவரின் தமிழ்ப் பற்றையும், தனித்தமிழ் ஆக்கமான வாடாமலர் எனப்படும் தேம்பாவணியுடன் இராமாயணத்தின் சில பாடல்களையும் ஒப்பிட்டு வீரமாமுனிவரதும், கம்பரதும், கவித்திறன் முதலியவற்றையும் குறித்து தலைவர் சொற்பொழிவு ஆற்றினர்.

இதனைத் தொடர்ந்து மன்றப் போஷகர் திரு. அ. இராசேந்திரம் ஆசிரியர் அவர்கள், "மறுமலர்ச்சி வீரமாமுனிவர்" என்ற பொருள் பற்றி அகராதிகள் ஆக்கியமை, எழுத்துக்களை திருத்தியமைத்தமை, குறியீடுகளை அமைத்தமை, உரை நடைகளை ஆக்கியமை, தமிழ் மொழியின் பெருமையை உலகம் அறியச் செய்தமை, மணிப்பிரவாள நடையை ஒழித்து தனித்தமிழ் முறையைப் புகுத்தியமை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு நீண்டதோர் சொற்பொழிவை ஆற்றினர்.

விழாவுக்குச் சமுகம் கொடுத்திருந்த திரு. எஸ். வேலுப்பிள்ளை ஆசிரியரும் அன்னரின் தமிழ்த்தொண்டுபற்றி உரை நிகழ்த்தினர்.

மாணவரிடையே செல்வன் எஸ். இராஜகோபால் முனிவரின் தொண்டு குறித்து இசைபாட, செல்வர்கள் எஸ். சுப்பிரமணியம், எஸ். என். செல்வரத்தினம், வி. சிங்காரம், ஆர். நமசிவாயம் என்பவர்களும், செல்வி எஸ்தர் லேயா ஜோன் என்பவரும் முறையே "வீரமாமுனிவர்," "தேம்பாவணியில் இலக்கிய இன்பம்," "வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டு," "வீரமாமுனிவரும் தேம்பாவணியும்," "இத்தாலியில் ஒரு கம்பன்" என்கின்ற தலையங்கங்களின் கீழ் உரை நிகழ்த்தினர்.

தலைவரின் முடிவுரையைத் தொடர்ந்து, செயலாளர் திரு. எஸ். நாராயணன் அவர்களின் நன்றியுரையுடனும் தமிழ் மொழி வாழ்த்துப் பாவுடனும் விழா இனிது நிறைவேறியது.

### தொண்டர்களுக்கு மண்டைதீவில் இளைஞர் கழக வரவேற்பு

வெள்ளிக்கிழமை (1-11-63) யன்று பாதயாத்திரை வந்த தமிழரசுத் தலைவர்களையும், தொண்டர்களை இளைஞர் முன்னேற்றக் கழகம் பூரண கும்பப் பொலிவுடன் பூக்கள் சொரிந்து வரவேற்றது. கழகத் தலைவர் திரு. செ. பரமநாதி ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வ. நவரெத்தினம் அவர்களுக்குக் கைத்தறிச் சால்வை அணிவித்தார். மற்றப் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு கழக அங்கத்தவர்கள் மலர்மாலைகள் அணிவித்தனர்.

மண்டைதீவு கிழக்கு மக்கள் சார்பில் அம்மன் கோவிலடியில் தொண்டர்களுக்குத் தேநீரும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன.

### அருந்ததியர் சங்க பொதுக் குழு

அருந்ததியர் சங்கப் பொதுக் குழுவின் கூட்டம் கடந்த 10-11-63 ஞாயிறு மாலை 4 மணியளவில் சங்கத் தலைவர் திரு. எஸ். சுந்தரராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது, பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) தற்போது நாடு முழுவதும் சமூக மக்களுக்கு உருவாகியுள்ள தொழில் நெருக்கடியை நிவர்த்திப்பதற்கு சங்கத்தின் பொது ஆலோசனைக் கூட்ட முடிவின் அடிப்படையில் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(2) காலஞ்சென்ற திரு. ஒ. ஆ. மா. சாமி நிதிக்கு, வாக்குறுதியளிக்கப்பட்ட கால எல்லைக்குள் தத்தமது நிதித் தொகையை நிதிக் குழுவினரிடத்தில் கொடுத்துதவுமாறு நிதியுதவியாளர்கள் மிக்க நன்றியறிதலோடு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### ஆசிரிய கலாசாலையில் தேவி விழா

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நவராத்திரி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கலை மகள் பூசை, கூட்டுப் பிரார்த்தனை, கலை மகள் தோத்திரம், என்பன இடம் பெற்றன. நவராத்திரி விழா இக் கலாசாலை இந்து மன்றத்தாரால் நடத்தப்பட்டது.

இலக்கியப் பேராசிரியர் திரு. எஸ். இராசையா பேசும் போது, நாம் சகோதரர் போல வாழ வேண்டும் எனவும், சமயத் துவேசத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது எனவும் எம் மதமும் சம்மதம் என்னும் கொள்கையுடன் வாழ வேண்டும் எனவும் கூறினர்.

### நாவலர் பேச்சுப் போட்டி

நாவலர் தினத்தை ஒட்டி வண்ணை நாவலர் பாடசாலையில் பேச்சுப் போட்டி ஒன்று நடைபெற்றது. பரிசு பெற்ருேர் விபரங்கள்:

ஆரம்பப் பிரிவு [அ] 1. ஆ. அரியகுமார், 2. இ. லீலாவதி, 3. தி. பரமராசா.

ஆரம்பப் பிரிவு [ஆ] 1. ப. நிர்மலாதேவி, 2. அ. சண்முகவேல், 3. பூ. தயானந்தன்.

கீழ்ப் பிரிவு [அ] 1. ஆ. உமாராணி, 2. மு. பராசக்தி, 3. க. சு. நடராசா.

கீழ்ப்பிரிவு [ஆ] 1. ம. இரத்தினம், 2. அ. முத்துலட்சுமி, 3. சு. நடராசா.

கீழ்ப்பிரிவு [இ] 1. செ. ஜெயலட்சுமி, 2. ப. கருணைமணி, 3. ச. நாகலிங்கம்.

மத்திய பிரிவு [அ] 1. பொ. சுந்தரவல்லி. மத்தியபிரிவு [ஆ] 1. சி. சின்னராசா, 2. ச. நாகேஸ்வரன். மேற்பிரிவு 1. தி. கைலாயநாதன், 2. நா. சோதிமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8வது கடைசி வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) சுரையா (ராகலை)

ஆனந்தா (கம்பளை) பிரீதி (அட்டன்) நியூவிஜேந்திரா (அனுராதபுரம்)


ஸ்ரீபாஸ்கரன் (அச்சுவேலி) ஈஸ்டன் (சம்மாந்துறை)

மற்றும் பல திரைகளில்!

பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல் பகையையும் சாடுகிறுர் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா, எம். ஆர். ஆர். வாசு, அசோகன், பி. கண்ணும்பா, சாண்டோ சின்னப்பா தேவர்

மற்றும் பலர் நடித்த



# தாயைக் காத்த தனயன்

---



## 2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) அசோகமாலா (நீர்கொழும்பு)

வேல்ஸ் (கண்டி) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை)

அதிக செலவுடன் தயாரிக்கப்பட்ட ஒரே படம்!

40 லட்சம் ரூபா செலவில், 4 வருடங்களாக எடுத்த படம்!

டெக்னிக் கலரில் முதலாவது தமிழ்ப் படம்!

ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் புகழ்பெட்டிய நடனராணி கமலா லக்ஷ்மணனின் களிப்பூட்டும் கண்கவர் நடனங்கள்!

ஜெமினி கணேசன்—சாவித்திரி—குசலகுமாரி—முத்துலட்சுமி மனேகர்—சாரங்கபாணி—கமலா லக்ஷ்மண்

மற்றும் பலர் நடித்த


# கொஞ்சும் சலங்கை

இலவச பாஸ்கள் செல்லுபடியாகா — கட்டணம் வழக்கம் போல்

செல்லமஹால் திரையில் 2-வது மாதம்! **வீரத் திருமகன்**

கெயிட்டி திரையில் 4-வது வாரம்! **வீரபாண்டிய கட்டபொம்மன்**

---



## நவம்பர் 29ந் திகதி வெள்ளி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு)

மொடர்ன் (பதுளை) மொடர்ன் (பண்டாரவளை) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (அட்டன்) ஜெமினி (ராகலை)

எண்ணக் குவியல்! உவமைகளின் சிறப்பு! பரபரப்பூட்டும் செயல்கள்!
அன்பும், பகையும் போட்டியிடும் உணர்ச்சி உலகின் பிரதிபலிப்பு:
புனித கொள்கையைத் தனது உள்ளத்தில் இருத்தி மக்களின் உள்ளங்களுக்கெல்லாம் மகிழ்வைக் கொடுத்த மகா மனிதனின் வாழ்க்கைக் கதை. எல்லோரும் பாருங்கள்!!

எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜாதேவி

எஸ். வி. சுப்பையா - எம். வி. ராஜம்மா - எம். என். நம்பியார்
ஷீலா தேவி - எஸ். ஏ. அசோகன் - லட்சுமி ராஜ்யம் - நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

சரவணு பிலிம்ஸ்

இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

டைரக்ஷன்: கே. சங்கர்

# பணத் தோட்டம்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 24 ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org